

# போலீசு: சட்டபூர்வ கிரிமினல் கும்பல்

'புதிய ஜனநாயகம்' வெளியீடு

● புதிய ஜனநாயகம்
வெளியீடு: 5

● நவம்பர் '89

● விலை: ரூ.5

□ வெளியீட்டாளர்:
எஸ். மதியழகன்
ஆசிரியர்,
புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

■ பிரதிகள் வேண்டுவோர்
மேற்கண்ட முகவரியுடன்
தொடர்பு கொள்க.

# அன்பார்ந்த வாசகர்களே!

படக்கட்டுரை என்கிற இந்த வடிவம் முற்றிலும் புதிய வடிவம் அல்ல. உலகின் பல மொழிகளிலும் ஏற்கனவே படக்கட்டுரைகள் பலவும் வெளிவந்துள்ளன. தமிழிலும் முக்கியமாக பல ருசிய மற்றும் சீன வெளியீடுகள் வெளி வந்துள்ளன.

ஆனாலும் நடப்பிலுள்ள சமூக, அரசியல் விவகாரங்கள் மீது விமர்சனங்கள், பிரச்சாரங்கள் என்கிற முறையில் படக்கட்டுரை வெளியிடுவது தமிழுக்குப் புதிய முயற்சி.

இந்த முயற்சி ஏன் அவசியமானது? எப்படி உருவாகியது? இது மிகவும் அக்கறைக்குரியது.

பரந்துபட்ட மக்களுக்கு, குறிப்பாக சொற்ப அளவே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கும், அந்த அளவுக்குக் கூட தெரியாதவர்களுக்கும் அரசியல் போதனை அளிப்பது பாட்டாளி வர்க்க இயக்கத்தில் நீண்ட காலமாகத் தீராதிருக்கும் பிரச்சினை.

ஒருபுறம், வலது சந்தர்ப்பவாதிகளான போலிக் கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்க பிழைப்புவாதம் மற்றும் நாடாளுமன்ற சந்தர்ப்பவாதம், மறுபுறம், இடது சந்தர்ப்பவாதிகளின் சிறிதுகால தனிநபர் 'பயங்கரவாத'த்துக்குப் பிறகு போர்க் குணமிக்க பொருளாதார வாதம். இவை இரண்டுமே பரந்துவிட்ட 'பாமர' மக்களுக்கு அரசியல் போதமளித்து புரட்சிகர இயக்கத்தில் அணி திரட்டத் தவறிவிட்டன.

அரசியல் போராட்டங்கள்தான் பரந்துபட்ட மக்களுக்கு செயல்பூர்வமான, எளிய முறையில் அரசியல் போதமளிப்பதற்கான உயர்ந்த வடிவம். ஆனால் அதற்கு முந்தைய அணி திரட்டலுக்குப் பொருத்தமான வடிவங்களைப் புரட்சிகர இயக்கம் கண்டறிவதற்கான முயற்சியில் இன்னமும் பூரண வெற்றியடைந்துவிடவில்லை.

நாடகம், பாடல்கள் பரந்துபட்ட மக்களை உணர்ச்சிபூர்வமாகத் தட்டி எழுப்புவதற்குப் பயன்படுகின்றன. இருப்பினும் மக்கள்திரள் அரசியல் போதனைக்கு அவை போதா. பத்திரிக்கைகள் அதற்கு கணிசமான அளவு பயன்படும் என்ற போதும் மெத்தப்படித்த அறிவு ஜீவிகளுக்கான வடிவமாகப் பத்திரிக்கைகள் முடக்கி வைக்கப்பட்டிருந்த சமயத்தில் புதிய கலாச்சாரம் மற்றும் புதிய ஜனநாயகம் ஆகியவை ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டன. நடப்பு அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்களின் மீது மார்க்சிய - லெனினிய விமர்சனங்கள் மூலம் - அதையே எளிமையாகத் தருவதன் மூலம் - ஓரளவு படித்த உழைக்கும் மக்களுக்கு அரசியல் போதமளிக்கும் புதிய வழியைத் திறந்துவிட்டன.

இருந்தாலும் கிராமப்புற, நகரப்புற 'பாமர' உழைக்கும் மக்களுக்கு அரசியல் போதமளிப்பதற்கு இவையும் போதா. இப்பணிக்காக சில புதிய வடிவங்களை நமது தோழாகள கண்டறிந்தார்கள். அவற்றில் ஒன்றுதான் படக்கட்டுரை. தோழர் சுந்தரம் துவங்கிய இந்த முயற்சிக்கு தோழர் நாதன் மற்றும் பிற தோழர்கள் பூரண உதவியளித்து ஊக்குவித்தனர்.


முதலாளித்துவப் பத்திரிக்கைகளில் வெளிவந்த புகைப்படங்களை சேகரித்து, வெட்டி ஒட்டி, தேவையான விளக்கங்கள், விமர்சனங்கள் எழுதினார்கள். போலீசு மற்றும் சில விவகாரங்கள் மீது படக்கட்டுரைகள் கொட்டை எழுத்துக்களில் தயாரிக்கப்பட்டன. அரைகுறையாகப் படித்தவர்களிடம் சுற்றுக்கு விடப்பட்டன. எழுதப்படிக்கவே தெரியாத நூற்றுக்கணக்கான உழைக்கும் மக்கள், சிறுவர் - சிறுமியரிடையே கூட படித்து விளக்கப்பட்டன. மகத்தான வரவேற்பைப் பெற்றன.

பரந்துபட்ட மக்களுக்கு அறிவுபூர்வமான அரசியல் போதமளிக்க முடியாது. நடைமுறை மூலம் மட்டுமே அவர்களால் புரிந்துகொள்ள முடியும் என்கிற மெத்தப்படித்த மேதாவிகள் வாதங்களைத் தவிடு பொடியாக்கியதைக் கண்கூடாகக் கண்டோம். நமது அமைப்பின் வாய்ப்பு வசதி பற்றாக்குறை காரணமாகக் கடந்த ஒன்பது ஆண்டுகளாக கையெழுத்து வடிவிலேயே இந்தப் புதிய முயற்சி முடங்கிக் கிடந்தது.

இப்போது முதன்முறையாக, கடுமையான நெருக்கடிகளுக்கு இடையேயும் இப்படக் கட்டுரையை அச்சிலே வெளியிடுகிறோம். சாத்தியமான அளவு ஏழை, எளிய 'பாமர' மக்களைச் சென்றடைய வேண்டும் என்று நாம் 'பேராசை'ப்பட்டாலும் இவ்வளவு அதிகமான விலை வைத்து குறுக்கிவிட வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பத்திரிக்கைக் காகித விலையைப் பன்மடங்கு ஏற்றி மக்களின் கருத்துரிமையைப் பறிக்கும் பாசிச கும்பலின் அடக்குமுறையே இதற்குக் காரணம்.

பல்வேறு முதலாளித்துவப் பத்திரிக்கைகளில் பணியாற்றுகின்ற உழைக்கும் பத்திரிக்கையாளர்களும், புகைப்படக் கலைஞர்களும்தான் இந்த நூலில் இடம்பெறும் புகைப்படங்களை எடுத்துள்ளனர்; ஆபாசமும் சீரழிவும் ஆதிக்கம் செலுத்தும் பத்திரிக்கை உலகில், சமூக உணர்வுடன் செயல்பட்டு மக்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளை வெளிக்கொணர்ந்த அவர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளோம்.

இம்மாதிரியான படக்கட்டுரைகளை வாங்கும் தோழர்கள் தாம் மட்டுமே வைத்துக் கொள்ளாது சாத்தியமான அளவு உழைக்கும் மக்களிடையே சுற்றுக்கு விடுங்கள். எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குப் படித்துக் காண்பியுங்கள். வாய்ப்புடைய தோழர்கள் மேலும் பல பிரதிகளை வாங்கி இலவசமாக விநியோகியுங்கள். இவை நமது புரட்சிகரக் கடமைகளில் முக்கியமானதாக ஏற்று ஆதரியுங்கள். புரட்சிகர வாழ்த்துக்கள்.



# போலீஸ் உங்கள் நண்பனா?

“போலீசு, நீதியின் காவலன்; மக்களின் நண்பன்; கொலை, கொள்ளை, ரவுடித்தனங்களில் ஈடுபடும் கிரிமினல் குற்றவாளிகளைத் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் பிடித்து, கோர்ட்டில் நிறுத்தி தண்டனை வாங்கித் தருவது போலீசின் கடமை. பொது ஒழுங்கிற்குக் கட்டுப்பட மறுப்பவர்களை, - சைக்கிள்களில் விளக்கில்லாமல் செல்பவர்கள் முதல் சாலையோரங்களில் சிறுநீர் கழிப்பவர்கள் வரை பிடிக்கவும் தண்டிக்கவும் போலீசுக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கடமையை பாரபட்சம் இல்லாமல் யாருக்கும் அஞ்சாமல் நிறைவேற்றுவதுதான் போலீசு.”

போலீசை உருவாக்கிய வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இன்று வரை மக்களுக்கு இப்படித்தான் சொல்லித் தரப்படுகின்றது. இது உண்மைதானா?

உண்மையில் போலீசு எதற்காக உருவாக்கப்பட்டது? யாருக்காகச் செயல்படுகிறது?

போலீஸ் என்பது ஒரு அடியாள் படை. பண்ணையார்கள், பெரும் தரகு முதலாளிகள்; பண முதலைகள் ஆகியோரைப் பாது காப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த அரசு அமைப்பில் அது ஒரு அங்கம். மக்களுடைய வரிப் பணத்தைத் தின்றுவிட்டு ஆளும் வர்க்கங்களுக்கு ஊழியம் செய்யும் கும்பல்.

வியர்வை சிந்திப் பாடுபடும் விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் உழைக்கும் மக்களை மிரட்டவும் ஒடுக்கவும் இருக்கும் கூலிப் படை. மக்கள் உழைப்பை உறிஞ்சித் தின்று அவர்களுக்கு எதிராகவே செயல்படும் இந்தப் புல்லுருவிக் கூட்டம் ஒருதனிவகைப்பட்ட சாதி.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் தலையிடவும், அவர்களைத் துன்புறுத்தவும், சுரண்டவும் அதிகாரம் படைத்ததுதான் போலீஸ். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற பெயரில் அந்த சட்டங்களுக்கே கட்டுப்படாமல் தறிகெட்டுத் திரியும் கும்பல்தான் போலீசு. துப்பாக்கியும் குண்டாந்தடியும் தான் இக்கும்பலின் ஜீவன்.

போலீசு சமூக விரோதிகளின் கூட்டாளி மட்டுமல்ல; அதுவே ஒரு கிரிமினல் கும்பல். காக்கிச் சீருடை அணிந்த, சட்டபூர்வமான கிரிமினல் கும்பல்.

போலீசின் இந்த உண்மைச் சொரூபத்தை மறைப்பதற்கு எவ்வளவுதான் முயன்றபோதும் தாங்கள் தான் இந்த நாட்டின் மிகப்பெரிய கேடிகள் என்றும், ஈவிரக்கமற்ற கிரிமினல்கள் என்றும் இக்கும்பல் நிரூபித்து வருகிறது. இதற்கு ஆதாரமாக ஆயிரமாயிரம் சம்பவங்கள் உண்டு. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் பார்ப்போம்!




1979 - பகல்பூர் - போலீசால் கண்கள் குருடாக்கப்பட்ட இளைஞர்கள். இவர்கள் கண்களை சைக்கிள் கம்பியால் தோண்டி திராவகம் ஊற்றியது போலீசு.







பீகார் மாநிலத்தில் பகல்பூர் ஒரு சிறு நகரம். அங்கே கிரிமினல் குற்றங்கள் அதிகரித்தன; ரவுடிகள் பெருத்துவிட்டனர். இதனால் மக்கள் போலீசின் மீது வெறுப்படையத் தொடங்கினர். இதனால் ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாக, குற்றங்களைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி போலீஸ் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

கிரிமினல்களுடன் கூடிக்குலவிக் கொண்டிருந்த பகல்பூர் போலீசு, அப்பாவி இளைஞர்களையும், அன்றாடக் கூலிகளையும், நடைபாதையில் வாழும் ஏழைகளையும் கைது செய்து கிரிமினல்களைப் பிடித்து விட்டதாகக் கணக்கு காண்பித்தது. 'குற்றத்தைக் குறைக்கும் நடவடிக்கை' என்ற பெயரில் கைது செய்யப்பட்ட அப்பாவிகளில் 32 பேரின் கண்களைத் தோண்டியது. துருப்பிடித்த ஊசியையும், சைக்கிள் கம்பியையும் அவர்கள் கண்களில் குத்தி திராவகத்தையும் ஊற்றியது. அவர்களது கண்கள் குருடாகிவிட்டதா என்று உறுதி செய்து கொள்வதற்காக பக்கத்தில் ஒரு டாக்டரையும் வைத்துக் கொண்டது.

இந்தக் கொலைபாதகச் செயலுக்கு, 'கங்கை நீர் தெளிப்பு நடவடிக்கை' என்று வக்கிரமாகப் பெயர் சூட்டி, குற்றவாளிகளைத் தண்டித்து





↑ இசைக்கல்லூரி மாணவர் கோபால்யாதவ்.

← சிறுவியாபாரி கிருஷ்ண முராரி.

வாரணாசி - போலீசால் முழங்காலோடு கால்கள் முறிக்கப்பட்ட இளைஞர்கள்; மாமூல் கொடுக்காமல் போகவே இவர்கள் கால்களை பறித்தது போலீசு.

பகல்பூரை புனிதப்படுத்திவிட்டதாக வருணித்தது போலீசு. 1979-லிருந்து தொடர்ந்து நடந்து கொண்டிருந்த இந்த அக்கிரமம் 1980-ல்தான் பத்திரிக்கைகளால் அம்பலப்படுத்தப்பட்டது. போலீஸ் அஞ்சவில்லை. கண்துடைப்பு நடவடிக்கையாக ஒருசிலர் இடமாற்றம் செய்யப்பட்டனர்; தற்காலிகமாக பதவிநீக்கம் செய்யப்பட்டனர்.

இதை எதிர்த்து பகிரங்கமாக ஊர்வலம் நடத்தியது பகல்பூர் போலீசு. அதே நேரத்தில் இந்தச் செய்தி பத்திரிக்கைகளில் வெளிவரக் காரணமாக இருந்தவர்கள் என்று சந்தேகப்பட்டு ஒரு சிறை அதிகாரி மீதும், சில போலீஸ்காரர்கள் மீதும் நடவடிக்கை எடுத்தனர் போலீஸ் உயரதிகாரிகள். ஆனால் கண்ணைப் பிடுங்கிய குற்றவாளிகளோ தண்டிக்கப்படவேயில்லை.

''குற்றவாளிகளைத் தண்டிப்பதில் அங்கொன்றும் இங்கொன்றும் சில தவறுகள் நடந்துவிடுகின்றன; அப்பாவிகள் சிலர் தற்செயலாக சிக்கிக் கொள்கின்றனர். தண்டனை அனுபவிக்கிறார்கள்'' என்று அரசாங்கம் போலீசுக்கு வக்காலத்து வாங்குகிறது. இல்லை. இது முழுப் பொய்! போலீசின் நடவடிக்கைகளை யாரும் கேள்வி கேட்க முடியாது. ஒரு போலீஸ்காரனுக்கு முன்னால் நிமிர்ந்து நடக்கக்கூட சாதாரண மக்களுக்கு உரிமை இல்லை. போலீசின் அதிகாரம் எல்லையற்றது. தட்டிக் கேட்பவர்களை மட்டுமல்ல; நமக்கேன் வம்பு என்று ஒதுங்கிச் செல்பவர்களைக்கூட போலீசு விட்டு வைப்பதில்லை.

போலீசைப் பகைத்துக் கொண்டு யாரும் உயிர்வாழ முடியாது. ''என்னையே எதிர்த்துப் பேசுறியா?'' ''என்கிட்டயே சட்டம் பேசறியா?'' - போலீசின் ஆரம்பக் கேள்விகளே இவைதான்.

**வா**ரணாசி. பகல்பூரைப் போலவே இங்கும் ''குற்றம் குறைக்



உத்திரபிரதேசம் - மக்களை பீதியுட்டுவதற்காக போலீசு கொலை செய்த கொள்ளைக்காரன் **சாபிராமின்** பிணம் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.



போலீசால் நொறுக்கப்பட்டவர்கள் தப்பியோடி விடுவார்களாம்! கால்களில் விலங்குடன் சமஷ்டிபூர் சிறைக்கைதி கள்.


கும் நடவடிக்கை'' என்ற பெயரில் நூற்றுக் கணக்கானோரைக் கைது செய்தது போலீசு. இளைஞர்கள், மாணவர்கள், நடைபாதை வியாபாரிகள் என்று பெரும்பாலானவர்கள் பல சந்தர்ப்பங்களில் போலீசுக்கு மாமூல் கொடுக்க மறுத்தவர்கள்; அதன் கட்டளைக்குப் பணிய மறுத்தவர்கள். இவர்களில் 12 இளைஞர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களின் காலை முழங்காலோடு முறித்து துண்டாக்கியது போலீசு.

மாமூல் கொடுக்க மறுத்ததற்காக இத்தனை கொடிய தண்டனை! போலீசின் பழிவாங்கும் வெறி மட்டுமல்ல இது. போலீசு என்றாலே மக்களை அச்சத்தால் நடுநடுங்கச் செய்வதற்கான குரூரமான சித்திரவதை!

ரவுடிகள், சமூக விரோதிகள், கொடிய கிரிமினல்களுடன், நெருக்கமாக உறவு வைத்துக் கொள்கிறது போலீஸ். அவர்களுடன் கூடிக்குலவுகிறது. திருடர்களிடமும், கள்ளச் சாரயப் பேர்வழிகளிடமும் மாமூலுக்காக வாலைக் குழைத்துக் கொண்டு நிற்கின்றன போலீசு நாய்கள். போலீசின் வீராப்புகள் கிரிமினல்களிடம் செல்லுபடியாவதில்லை. கிரிமினல்களை பகைத்துக் கொண்டால் தங்களது உயிருக்கே உத்திரவாதம் இல்லை என்பதால் அவர்களுக்கு அஞ்சி நடுங்குகின்றனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஆயுதம் ஏந்திய கொள்ளைக் கூட்டத்தின் கொலை, கொள்ளைகள் கட்டுமீறிப் போகவே வேறு வழியின்றி நடவடிக்கையெடுக்க நேர்ந்தது. கொள்ளைக்காரர்கள் என்ற பெயரில் நிலப்பிரபுக்களை எதிர்த்த கிராமப்புற விவசாயிகளை வேட்டையாடியது போலீசு. சாபிராம் என்ற கொள்ளைக்காரன் கொல்லப்பட்டவுடன், அவனுடைய பிணத்தைக் கொண்டு வந்து, அவனது ஊரின் முச்சந்தியில் கட்டிவைத்தது. இது மற்ற கொள்ளைக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுவதற்கு அல்ல; மக்களை மிரட்டுவதற்கு, குலைநடுங்கச் செய்வதற்கு!

மக்கள் மத்தியில் மட்டுமல்ல கைதிகளை நடுங்கவைக்கவும் இதே உத்தியைத்தான் கையாள்கிறது. போலீசின் கொடிய சித்திரவதைக



ஒரிசா: இதோ! இந்தச் சிறுவர்கள் எதற்காக முழந்தாளிட்டு நிற்கிறார்கள்? பிரார்த்தனையா, இல்லை பாடம் படிக்காததற்கு ஆசிரியர் கொடுத்த தண்டனையா? பள்ளி நிர்வாகத்தின் ஊழலை எதிர்த்துப் போராடியதற்காக போலீசு இவர்களுக்குக் கொடுத்த தண்டனை இது! அவர்கள் வெறுமனே முழந்தாளிட்டு நிற்கவில்லை. அவர்களது தலையில் சுமக்கமுடியாத அளவுக்குப் பாராங்கற்கள்!

1984 - **குஜராத்:** பரம்பரை பரம்பரையாகத் தாங்கள் பயன்படுத்தி வந்த 75 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தைப் பறிமுதல் செய்து பணக்கார விவசாயிகளுக்குக் கொடுக்கப்போவதாக குஜராத் அரசு அறிவித்ததை எதிர்த்துப் போராடினார்கள் கருடி கிராமத்தின் விவசாயிகள். விளைவு - 5 விவசாயிகளை சுட்டுக் கொன்றுவிட்டு தற்காப்புக்காக சுட்டதாகக் கூறியது போலீசு. கொல்லப்பட்ட விவசாயிகளின் குழந்தைகள் இவர்கள் - இன்று அநாதைகள்!



ளால் நொறுங்கிப் போய் நடக்கக் கூட முடியாமல் நாயைப் போல தவழ்ந்து வரும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்ட கைதிகளையும் விட்டுவைப்பதில்லை. நோய் வாய்ப்பட்டு படுக்கையில் கிடப்பவர்களின் கால்களிலும் விலங்கிட்டுப் பூட்டிவைத்து உயிரோடு அவர்களுக்கு சமாதி எழுப்புகிறது.

காரணம் இருந்தால்தான் போலீசு கைது செய்யும் என்பதில்லை; தனது எதிரிகளைத்தான் போலீசு பழிவாங்கும் என்பதுமில்லை. போலீசின் கரங்கள் நீளமானவை; பொறுக்கித் தின்று தினவெடுத்தவை. அவை யாரையும் தீண்டும். பிடித்துத் தண்டித்த பின்னால் அதற்குக் காரணத்தை உருவாக்கும் திமிர் கொண்டதுதான் போலீசு.

இவ்வாறுதான் காங்கிரசு ஆளும் குஜராத் மாநிலத்தில் '87 ஆம் ஆண்டில் மே மாதம் முதல் நவம்பர் மாதத்திற்குள் 1,701 அப்பாவிகளை பயங்கரவாதிகள் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தது போலீசு. நான்கு குழந்தைகளின் தாயான 45 வயது சுதா பீபி என்ற விதவையை பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து 9 மாதங்கள் சிறையிலடைத்து வைத்தது. அந்தப் பெண் தனது வீட்டுக் கூரையில் வெடிகுண்டுகளை மறைத்து வைத்திருந்ததாக கூசாமல் பொய்க் காரணம் கூறியது.





↑ குஜராத்: நான்கு குழந்தைகளின் தாயான இந்த விதவைப் பெண்ணை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 9 மாதம் சிறை வைத்தது போலீசு.

1982 - உத்திரப்பிரதேசம்: உள்ளூர் ரவுடிகளை எதிர்த்ததற்காக போலீசால் கொலை செய்யப்பட்ட வதை கம்யூனிஸ்டு கட்சி ஊழியர் ராம் ஸ்நேகி →

← மத்தியப்பிரதேசம் - சட்டாப்பூர் சிறை: மாடுகளைப் போல மனிதர்களையும் காயடிக்கிறது போலீசு. ஆண்மை குறையாடப்பட்ட விஷ்ணு சர்மா.







அருண் கப்டே என்ற 45 வயது தொழிலாளி, எடுப்புச் சாப்பாடு சுமந்து செல்லும் யூனுஸ் யூசுப் மாலிக் என்ற சிறுவன், முடிதிருத்தும் தொழில் செய்யும் 17 வயதுச் சிறுவன் முகமது உசேன், பெட்டிக் கடை வைத்துப் பிழைக்கும் 65 வயது சோட்டோலால் ராணா - இவர்கள் மட்டுமல்ல; பயங்கரவாதிகள் என்று போலீசு கைது செய்த 1,701 பேருமே இத்தகைய அப்பாவி மக்கள் தான்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் முஸ்லீம்கள். பரோடாவில் நடைபெற்ற இந்து - முஸ்லீம் கலவரத்திற்கு இந்த 1701 பேரும்தான் காரணம் என்று அபாண்டமாக பொய்க்குற்றம் சாட்டியது போலீசு. தனது இந்துமத வெறியை துப்பாக்கி முனையில் நிலைநிறுத்தியது.

பீகார்! காக்கிச்சட்டை மிருகம், ஒரு உயிருள்ள மனிதனை தனது காலுக்கு மிதியடியாக போட்டுக் கொண்டு பவனிவருகிறது. கீழே சுருண்டு கிடப்பவன் ஒரு கிரிமினல் குற்றவாளியாம்! உடம்பு சுகவீனமாக இருப்பதால் அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறதாம் இந்த மிருகம்! சிறைக்கொட்டடிக்குள் அவனை தீர்த்துக்கட்டினால் அது சட்டப்படிக் குற்றம்! சிறைக் கொட்டடி சித்திரவதைகளில் உயிரோடு கொன்றுவிட்டு மருத்துவமனையில் கொண்டுபோய் மூச்சை நிறுத்துகின்றன. கொலை குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்கின்றன. அப்படி இறப்பு சான்றிதழை பெறுவதற்குதான் இந்த உயிருள்ள மனிதனை பன்றி மாதிரி கயிறு போட்டு கட்டி எடுத்துச் செல்கிறது, போலீசு. ''படமா...? எடுத்துக்கொள்ளுங்கள் விபரமாக...? குறித்துக் கொள்ளுங்கள்'' என்ற அகங்காரம், அதிகார திமிர்!



முன்னா: அலகாபாத்திலிருந்து 'டிக்கெட்' இல்லாமல் ரயிலில் பயணம் செய்தாராம்! 40 நாட்களுக்கும் பேலாக ஜனசந்தடி மிக்க குரேகான் ரயில் நிலைய 'பெஞ்சு'டன் விலங்கிட்டு வைத்தது போலீசு. 'டிக்கெட்' இல்லாமல் பயணம் செய்தவருக்கு நூறு ரூபாய் அபராதம் அல்லது ஒரு வாரம் சிறை தண்டனை! 'சட்டமாவது, வெங்காயமாவது, இதுதான் எங்கள் சட்டம்' என்று கொக்கரிக்கிறது, போலீசு. மன நோயாளிகளிடம் கூட கொஞ்சம் மனித நேயம் இருக்கும். ஆனால் போலீசு பைத்தியங்களோ, அதிகார வெறியேறி ஆயுதத்தை வைத்துக் கொண்டு அம்மணமாக ஆடுகின்றன!



## காக்கும் கரங்களா? தாக்கும் பேய்களா?

பொய்க்குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்க போலீசு கையாளும் சித்திரவதைகள் வார்த்தைகளால் விவரிக்க இயலாத அளவு வக்கிரமானவை; இரத்தத்தை உறைய வைக்கும் அளவு கொடூரமானவை. குற்றத்தை ஒப்புக்கொள்ள வைப்பதற்காக ஒருவரைத் துன்புறுத்துவது கிரிமினல் குற்றம் என்று சட்டம் இருந்தபோதிலும் 'உண்மையை வரவழைக்க' சித்திரவதை செய்வது தான் வழி என்று பகிரங்கமாக நியாயப்படுத்துகிறார்கள் போலீசுகாரர்கள். ஆங்கிலேயரின் 400 ஆண்டு கால ஆட்சியில் நடந்ததைவிட கடந்த 40 ஆண்டுகளில் நடந்துள்ள சித்திரவதைகளும் கொலைகளும் அதிகம்.

நகக்கணுவில் ஊசியேற்றுவது, ஆணியடிப்பது, மறைவிடங்களில் சிகரெட் நுழைப்பது, மூத்திரத்தைக் குடிக்கவைப்பது - இவையெல்லாம் சாதாரண முறைகள். குண்டுச்சட்டி முறை, கோல் கொண்டா முறை, குறுந்தடி முறை, ஆண் உறுப்புகளில் மின்சாரத்தைப் பாய்ச்சுவது - என்று சித்திரவதை முறைகளை புதிது புதிதாகக் கண்டு பிடித்துச் சேர்க்கிறது போலீஸ்.


சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற போர்வையில் போலீசு செய்யும் அக்கிரமங்கள் பட்டயங்களும் பதவி உயர்வுகளுக்கும் உரிய சாதனைகளாக அரசாங்கத்தால் போற்றப்படுகின்றன. சட்டங்கள் அவர்களுக்கேற்றபடியெல்லாம் வளைகின்றன.



மாயாதியாகி - 1980 - பாக்பட் - கணவரை சுட்டுக்கொன்று விட்டு இவரை 9 போலீசுக்காரர்கள் கற்பழித்தனர்.

''நான் செய்த குற்றமென்ன? பெண்ணாய்ப் பிறந்தது தானா?'' உடைந்துபோய் இப்படிக் கேள்வி எழுப்புகிறாள் மாயாதியாகி என்ற சகோதரி. உத்திரப்பிரதேச மாநிலம் பாக்பத் நகரம். கணவனுடன் காரில் அமர்ந்திருந்த மாயாதியாகியை பட்டப்பகலில் பலாத்காரம் செய்ய முயன்றனர் அவ்வழியே சென்ற போலீசு காமவெறியர்கள். தட்டிக்கேட்ட கணவனை அங்கேயே சுட்டுக் கொன்றனர். அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணை முழு நிர்வாணமாக்கி நகர் முழுவதும் இழுத்துச் சென்றனர். கர்ப்பிணியான அவளை 9 போலீசு மிருகங்கள் மாறிமாறிக் கற்பழித்தன. அவளது பெண் உறுப்பில் தடியைச் சொருகி அவள் துடிப்பதைக் கண்டு ரசித்தன.

பட்டப்பகலில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்முன்னே நடந்த இந்த அக்கிரமத்தை விசாரித்துத் தீர்ப்பு வழங்க நீதிமன்றத்திற்கு 8 ஆண்டுகள் தேவைப்பட்டன. செசன்ஸ் நீதிமன்றம் 6 போலீசுக்காரன்களுக்கு தூக்குதண்டனை வழங்கியது. அவர்களோ 'நீதி' கேட்டு உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்



1988 - 8ஆண்டுகளுக்கு பிறகு மாயாதியாகி. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. ''பெண்ணாய் பிறந்ததுதான் நான் செய்த குற்றமா'' துயரத்துடன் கேட்கிறார்.



''நான் குழந்தைகளைத் தூங்க வைத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் திடீரென்று குடிசைக்குள் நுழைந்தார்கள். என் வாயில் துணியை அடைத்து விட்டு என் குழந்தைகளின் முன்னேயே என்னைக் கற்பழித்தார்கள்'' -அசாம் துப்பாக்கி படையால் கற்பழிக்கப்பட்ட லட்சுமிதி.



பள்ளி செல்லும் சிறுமியா, பச்சிளங்குழந்தையா என்பதெல்லாம் கவலையில்லை போலீசு மிருகங்களுக்கு! ஜூன் '88 - அசாம் துப்பாக்கிப் படையினரால் கற்பழிக்கப்பட்ட 12 வயது பஞ்சலட்சுமி.

திருக்கின்றனர். கணவனை இழந்து நிராதரவாக மாயாதியாகி காத்துக் கொண்டிருக்கிறாள் - நீதி கிடைக்கும் என்று!

உத்தரப்பிரதேசத்திற்கு ஒரு பாக்பட். தமிழகத்திற்கு தளி. பள்ளி ஆசிரியை கல்பனா சுமதியை ஸ்டேஷனில் வைத்துக் கற்பழித்து குற்றுயிராக புதரில் வீசியெறிந்தார்கள் தமிழகத்தின் காக்கி உடைக் கிரிமினல்கள்.

நாட்டிலுள்ள அத்தனை சமூக விரோதிகள், காம வெறியர்கள், கிரிமினல்கள் புரிந்துள்ள கற்பழிப்புக் குற்றங்களைவிட போலீசாரின் கற்பழிப்புகள்தான் அதிகம். வெறும் காம வெறியின் காரணமாக மட்டுமே போலீசு மிருகங்கள் கற்பழிப்பதில்லை. தனக்குப் பணியாத பெண்களுக்கு, தன்னைக் கண்டு அஞ்சாத பெண்களுக்கு, தன்னை எதிர்த்துப் பேசும் பெண்களுக்குத் தரப்படும் தண்டனை - கற்பழிப்பு.

தாங்கள் கற்பழிப்பது மட்டுமல்ல; தாயையும் மகனையும் உடலுறவு கொள்ளுமாறு செய்வது, சகோதரனையும் சகோதரியையும் உடலுறவு கொள்ள வைப்பது, கணவனெதிரில் மனைவியை, தாயினெதிரே மகளைக் கற்பழிப்பது ஆகியவற்றை சித்திரவதை முறைகளா



1988 - பீகார் - பராரியா - போலீசுக்காரன்களால் கற்பழிக்கப் பட்ட அபலை. நடு இரவில், கணவன் கண்ணெதிரில் கற்பழித்தது போலீசு.

கவே வைத்திருக்கிறது போலீசு. இத் தகைய சித்திரவதைகளை பெண் போலீசுகளே செய்கின்றனர்!

பீகார் - பராரியா கிராமம். குற்றவாளி ஒருவனைத் தேடுகிறோம் என்று சொல்லிக் கொண்டு கிராமத்தில் புகுந்து அங்கிருந்த தாழ்த்தப்பட்ட பெண்கள் அனைவரையும் கற்பழித்தது போலீசு. தாயின் கையிலிருந்து குழந்தையைப் பிடுங்கி வீசி எறிந்தான் ஒரு போலீசுக்காரன். கதறியழுத தாயிடம், ''அது செத்தால் என்ன? நான் உனக்குக் குழந்தை தருகிறேன்'' என்று அவரைக் கற்பழித்தான்.

கேரள மாநிலம் - தங்கமணி கிராமம். பஸ் விடக்கோரி போராட்டம் நடத்திய மக்களை ஒடுக்குவதற்காக வந்திறங்கியது போலீசு பட்டாளம். கிராமத்தின் ஆண்களெல்லாம் தலைமறைவாகிவிட்டனர். ''எங்க





1986 - கேரளா: போலீசால் கற்பழிக்கப் பட்ட தங்கமணி கிராமத்துப் பெண்கள்; பஸ் வசதி கோரி போராடியதற்கு இந்தத் தண்டனை!
**உள்ளே: சாலிவர்கீஸ் - சகோதரி யைக் கற்பழிக்க முயன்ற போலீசுக்கார னின் கைவிரலைத் துண்டித்து விரட் டிய தங்க மணி கிராமத்து வீராங்கனை.**




ஆத்திரமடைந்த மக்களால் இடித்துத் தள்ளப்பட்ட தங்கமணி போலீசு நிலையம் - **துணிச்சலான ஆரம்பம்.**

ளிடமிருந்தா தப்பித்தீர்கள்? பார் உங்களுக்குப் பாடம் கற்பிக்கிறோம் '' என்று கிராமத்துப் பெண்கள் அனைவரையும் கற்பழித்தனர். அசாம், திரிபுரா, மிசோரம், நாரா யண்பூர்... ஒன்றல்ல, இரண்டல்ல; போலீஸ் நாய்களின் கும்பல் கற்ப ழிப்புகளுக்கு கணக்கில்லை.

போராட்டத்தையும், எதிர்ப் பையும் ஒடுக்குவதற்குத்தான் கற்ப ழிப்புகள் என்றில்லை. கேரள மாநி லம் அப்பப்பாரா என்னும் கிராமத் தின் மலை ஜாதிப் பெண்களைச் சாராயம் குடிக்க வைத்து முழு நிர் வாணமாக்கி, நடனமாடவிட்டு ரசித் தனர் எஸ்டேட் முதலாளிகளும், காட்டிலாகா அதிகாரிகளும், போலீ சும். அதன்பின் அவர்களைக் கற்ப ழித்தனர். ஆக்கிரமித்துக் கைப்பற் றிய நாட்டில் ராணுவம் நடத்தும் அக்கிரமங்களுக்குச் சற்றும் குறை வில்லாமல் சொந்த நாட்டு மக்களை அடிமைகளைப் போலவும், பெண் களை தங்கள் போகத்துக்கென்றே படைக்கப்பட்ட பொருளைப் போல வும் நினைத்து வெறியாட்டம் போடும் கூட்டம்தான் போலீசு.



கண்டதும் சுட
துப்பாக்கியும், கூட்டத்தைக்
கலைக்கத் தடியும் போதவில்லை
போலீசு மிருகங்களுக்கு.
மக்களின்
மண்டையைப் பிளக்க
பேடிகளைப்போல கற்களை
மறைத்து வைத்திருக்கிறது!




மிருகங்களின் ஆட்சியில் மனிதாபிமானத்திற்கு இடமேது? ஒரு நிராயுத பாணியைத் தாக்க 7 போலீசுக்காரன்கள்; இவர் சீக்கிய பயங்கரவாதியல்ல; விற்பனைவரி உயர்வை எதிர்த்துப் போராடும் ஒரு வியாபாரி.

அடிமைகளாக அடங்கிக் கிடக்காமல் தங்களது உரிமைகளுக்காகவும், கோரிக்கைகளுக்காகவும் போராடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் போலீசுக்குப் பகைவர்கள்தான். 'சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது', 'பந்தோபஸ்து', 'அமைதியை நிலைநாட்டுவது' என்று பல பெயர்களில் மக்களின் போராட்டங்களை ஒடுக்குகிறது போலீசு. ''நாங்கள் என்ன செய்ய முடியும்? அரசாங்கத்தின் உத்தரவை நிறைவேற்றுகிறோம். அவ்வளவுதான்'' என்று தங்களுடைய அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிக்கிறது போலீசு.

''பொதுக்கூட்டம் போடாதே'' என்றால் போடக்கூடாது; 'கலைந்து போ' என்றால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து போக வேண்டும்; 'ஊர்வலம் நடத்தக்கூடாது' என்றால் நடத்தக்கூடாது. போலீசின் ஆணையை மீறுவதற்கு எவனுக்கும் உரிமை கிடையாது என்பதுதான் அவர்களது நீதி. கோரிக்கை எவ்வளவு நியாயமானதாக இருந்தாலும் சரி, அதற்காகவே பல இடங்களிலிருந்து வந்த மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்தாலும் சரி, அதைப்பற்றியெல்லாம் போலீசுக்குக் கவலையில்லை.

அது குடிதண்ணீருக்கான போராட்டமோ அல்லது கூலி உயர்வுக்கான போராட்டமோ - போலீசின் தடையை மீறி நடத்தப்படும் எந்தப் போராட்டமும் தனக்கெதிராக, தனது அதிகாரத்திற்கெதிராக நடத்தப்படும் போராட்டமாகக் கருதி வெறியுடன் பாய்கிறது போலீசு.



சொந்த தாய்மொழி மீதே பற்றற்ற சதைப்பிண்டங்கள்தான் போலீசு. கன்னட மொழியை ஆட்சி மொழியாக்கக் கோரும் போராட்டத்தை உடைக்கும் கர்நாடக போலீசு!




''பெண்கள் ஆண்களின் அடிமைகள்; அவர்களுக்கு எதற்கு சுயமரியாதை?'' - இந்தியப் பெண்களின் கன்னித்தன்மையைச் சோதனை செய்யும் பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் போராடும் பெண்ணின் மீதும் தடியடி!

போலீசு அனுமதியுடன் அமைதியாக நடத்தப்படும் போராட்டங்களையும் போலீசு விட்டு வைப்பதில்லை.

''உடம்பின் நுட்பமான பகுதிகளிலும் தலையிலும் படும்படி தடியடி நடத்தக்கூடாது; துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்னால் அறிவிப்பு கொடுக்க வேண்டும், வானத்தை நோக்கி சுடவேண்டும், அப்படியும் கலையவில்லையென்றால் முழுங்காலுக்குக் கீழேதான் சுடவேண்டும்'' — இவையெல்லாம் போலீசின் வன்முறையை 'ஒழுங்குபடுத்தும்' சட்டங்கள். ஆனால் எந்தக் காலத்திலும் போலீசுக்காரர்கள் இதைப் பின்பற்றுவதில்லை.

போலீசின் தடிகள் மண்டையைத்தான் பிளக்கின்றன; தோட்டாக்கள் மார்பிலும் முதுகிலும்தான் பாய்கின்றன. கைவசம் துப்பாக்கி இல்லாத போது கற்களால் மண்டையைப் பிளக்கிறார்கள் காக்கிஉடைப் பொறுக்கிகள். போலீசு மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வது இருக்கட்டும். இருக்கின்ற சட்டங்களையே தூர வீசிவிட்டு வெறியாட்டங்கள் நடத்தியதற்காக இதுவரை ஒரேயொருமுறையேனும் அரசு அவர்களைத் தண்டித்திருக்கிறதா? இல்லை.



பம்பாய். தொழிற்சங்க தலைவர் தத்தா சமந்த். ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கியதால் அவரை தூக்கிச் சென்று கைது செய்தது. போராட்டக் காரர்களை இப்படித்தான் இழிவுபடுத்துகிறது போலீசு.

(உள்ளே) 1983 - குஜராத் - ஆலை மூடலை எதிர்த்து தற்கொலை செய்து கொள்ள முயலும் தொழிலாளியை கைது செய்து இழுத்துச் செல்கிறது போலீசு. உயிரைப் பறிக்கவும் போலீசுக்குத்தான் உரிமை!

குஜராத். மூடிய துணி ஆலைகளைத் திறக்கக் கோரி போராடிப் பயனின்றி இனி சாவது ஒன்றுதான் வழி என்று முடிவுக்கு வந்தார்கள் தொழிலாளர்கள். ''நாங்கள் குழந்தைகளுடன் பட்டினியால் வதைபடுகிறோம். இனி மேலும் நாங்கள் உயிர்வாழ வேண்டுமானால் திருடர்களாக மாறவேண்டும். அதைவிடச் சாவதே கவுரவமானது'' என்று அறிவித்தார்கள். காசில்லாமல் மருத்துவமனையிலிருந்து விரட்டப்பட்டு நடைபாதையிலே பிரசவித்த தொழிலாளர்களின் மனைவிமார்களும் இப்போராடடத்தில் பங்கேற்றார்கள்.

கல் நெஞ்சையும் கரைக்கும் இந்தப் போராட்டத்தையும் போலீசு தடிக்கம்புகளால் உடைத்தது. சாக அனுமதிக்குமாறு மன்றாடியவர்களை அடித்து நாய்களைப் போல





1983 - ஆந்திரா: புரட்சிகர மாணவர்களை ஒடுக்க காகதீயா பல்கலைக் கழகத்திற்குள்ளேயே படையெடுக்கும் போலீசு.

1985 - சென்னை: போலீசால் சூறையாடப் பட்ட மீனவர் குடியிருப்புகள்.


1984 - வேலை நிறுத்தத்தில் போலீசால் கொல்லப்பட்ட பாராதீப் துறைமுகத் தொழிலாளியின் மனைவி↓



இழுத்துச் சென்றது போலீசு. பெண்களையும் கைது செய்து சிறையிலடைத்தது.

ஜனதா ஆட்சிக்காலத்தில் கான்பூர் சுதேசி மில் தொழிலாளர்களை குருவிகளைப் போல சுட்டுக் கொன்றது போலீசு. தமிழகத்தில் அரவங்காட்டில் போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்களை 'பேசித் தீர்க்கலாம்' வாருங்கள் என்று அழைத்து, நம்பி வந்தவர்களை நேருக்கு நேர் சுட்டுக் கொன்றான் போலீசு வெறிநாய் தேவாரம். கடற்கரையே எங்கள் பிறந்தமண் என்று போராடிய மெரினா மீனவர்களை கடற்கரையிலேயே பிணமாக்கி குவித்ததும் தேவாரம்தான். அவனது பரிவாரங்களோ மீனவர்களது வீடுகளைச் சூறையாடின; தீ வைத்தன.

ஈவு, இரக்கம், மனிதாபிமானம் என்ற சொற்களுக்கும் போலீ



'பாடம் கற்பிக்க எங்களாலும் முடியும்' என்று பாய்கிறது போலீசு. சென்னை அண்ணாசாலையில் ஆசிரியர்கள் மீது தடியடி நடத்தும் போலீசு.



1983 - கேரளம் - போராடும் அரசு ஊழியர்கள் மீது போலீசு தடியடி. 'அரசு அடிமைகளுக்கு இவ்வளவு திமிரா?'

சுக்கும் எள்ளளவும் சம்பந்தம் கிடையாது. தேவாரத்தைப் போன்ற நயவஞ்சகர்களுக்கும் கொலைவெறியர்களுக்கும் தான் பதக்கங்கள், பதவி உயர்வுகள்.

தங்களது சுயமரியாதையைக் காத்துக் கொள்ள போராடும் பெண்கள், சம்பள உயர்வுக்காகப் போராடும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், கல்விக்காகப் போராடும் மாணவர்கள், வேலை கேட்டுப் போராடும் பட்டதாரிகள் - அவர்கள் யாராக இருந்தாலும் சரி படித்தவர்களானாலும் பாமரனானாலும், அவர்களது கோரிக்கை என்னவாக இருந்தாலும் போலீசின் கொலைக்கரத்தை அவர்கள் சந்தித்துதான் தீர வேண்டும்.


பீகார் - ஆர்வால் எனும் ஊரின் ஒரு பள்ளிக்கூடத்தின் மைதானத்தில் கூட்டம் நடத்தினார்கள் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள். அவர்கள் நக்சல்பாரிகளின் தலைமையில் ஒன்றுதிரண்டிருந்தார்கள் என்றே ஒரே காரணத்திற்காக போலீசு அவர்களை வேட்டையாடி





1986 - ஆர்வால் படுகொலையில் தப்பிப் பிழைத்தவர்கள். உயிர் பிழைத்திருப்பது நிரந்தரமா?

(உள்ளே) 1986 - ஆர்வால் படுகொலைக்கு நீதி விசாரணை கோரும் ஆர்ப்பாட்டத்திலும் போலீசு வெறியாட்டம். 'போலீசு மீது நீதி விசாரணை கோருவதா?'




வெள்ளைக்காரன்கள் ஆட்சி போய் போலீசுக்காரன்கள் ஆட்சி! ஆர்வால் - மீண்டும் ஒரு ஜாலியன் வாலாபாக் 100க்கும் மேற்பட்ட கூலி ஏழைகள் இங்கு குருவி சுடுவதுபோல் சுட்டுக்கொல்லப்பட்டனர். தப்பியோட வழியில்லை. நான்கு பக்கம் சுவர். இருந்த ஒரே வழியையும் அடைத்து நரவேட்டையாடியது போலீசு. நக்சல்பாரிகள் தலைமையில் திரண்டதுதான் இவர்கள் செய்த குற்றம்!




படுகொலை முடிந்தபின் பந்தோபஸ்து! பாதுகாப்பு தருகிறோம் என்ற பெயரில் கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களை கிராமங்கள் தோறும் சென்று மிரட்டுகிறது போலீசு!

யது. நாற்புறமும் அடைக்கப்பட்டிருந்த அந்த மைதானத்தின் வாயிலையும் மறித்துக் கொண்டு எல்லா திசைகளிலிருந்தும் துப்பாக்கிச்சூடு நடத்தியது. 12 வயது சிறுமி, பெண்கள் உள்பட 100க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள்.

சுடுவதற்கான முகாந்திரம் இல்லை. உத்திரவு இல்லை. முன்னெச்சரிக்கை தரப்படவில்லை. ''அவர்களக்குப் பாடம் புகட்டுவதற்காகவே சுட்டோம்'' என்று பகிரங்கமாகவே அறிவித்தான் அந்த மாவட்டத்தின் போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு சி.கே.காஸ்வன். ஜாலியன்வாலாபாக் படுகொலையை முன்நின்று நடத்திய பிரிட்டிஷ் அதிகாரி ஜெனரல் டயர்கூட இதே வார்த்தைகளைத்தான் சொன்னான்.

மக்களின் போராட்டங்களை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த சம்பவங்கள் கணக்கிலடங்காதவை. போராடியவர்கள் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கவில்லை; பொது அமைதியைக் கெடுக்கவில்லை. போலீசை எதிர்த்தும் போராடவில்லை. அவர்கள் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காகத்தான் போராடினார்கள். மக்களின் கோரிக்கைகளைப் பரிவுடன் கவனிப்பதாகச் சொல்லும் அரசாங்கங்களோ போலீசை ஏவி விட்டன. ''சட்டத்தின் ஆட்சி''யில் போலீசின் தோட்டக்கள் உழைக்கும் மக்களின் மீது மட்டும்தான் பாய்கின்றன.






**குதிரை வண்டிக்காரர்கள், ரிக்ஷாக்காரர்கள் போன்ற ஏழை எளியோர் மீதுதான் பாய்ந்து குதறுகிறது போலீசு!**

சட்டபூர்வமான குறைந்தபட்சக் கூலியைக் கூடக் கொடுக்க மறுக்கும் முதலாளியையோ, தாழ்த்தப்பட்ட பெண்களைக் கற்பழிப்பதைத் தங்கள் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் நிலப்பிரபுக்களையோ, தாழ்த்தப்பட்ட மக்களை நரவேட்டையாடும் சாதி வெறியர்களையோ, சமூகவிரோத மாஃபியா கும்பல்களின் தலைவர்களையோ போலீசின் குண்டாந்தடிகள் தொட்டதுகூட இல்லை. சட்டப்படி கைது செய்து தண்டிப்பதற்கான காரணங்கள் மலைமலையாக இருந்தும் போலீசின் விரல்கள்கூட அவர்களைத் தீண்டியதில்லை.



# காஷ்மீர்

போலீசின் குண்டுக்கு இரையானது இந்தப் பெண்ணின் எதிர்காலம்.

கூலி உயர்வுக்கான போராட்டங்களை மட்டுமல்ல; தங்கள் மொழி, இனம், மதம், பண்பாடுகளைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடும் சிறுபான்மை மக்களையும் இப்படித்தான் அடக்கி ஒடுக்கிறது போலீசு. ''போராடுகிறார்கள்! நொறுக்கு, அகப்பட்டதை சுருட்டு'' என்று வெறியோடு பாய்கிறது, போலீசு.

சுயநிர்ணய இன உரிமைகளுக்காக காஷ்மீரி இன மக்கள் கடந்த 42 ஆண்டுகளாகப் போராடுகிறார்கள். ''பிரிவினைவாதிகள'', ''பாகிஸ்தான் கைக்கூலிகள்'' என்று முத்திரைக் குத்தி ஒடுக்குகிறது, போலீசு. ''ஆட்சியாளர்கள் 'கோல்ப்' விளையாட்டிலும் மலையுச்சியில் இழுவை கார்களிலும் பொழுதைப் போக்குகிறார்கள். நாங்கள் நரகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்''





↑தேர்தலைப் புறக்கணித்தவர்களை நரவேட்டையாடியது போலீசு. கொல்லப்பட்ட உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அஸ்ஸாமியப் பெண்கள்.

←1983 - அஸ்ஸாம்: நெல்லி படுகொலை! முன்னரே தெரிவித்தும் பாதுகாப்புத்தர வக்கற்ற போலீசு பிணங்களை எண்ணுவதற்குத்தான் வந்து சேர்ந்தது!

← அஸ்ஸாம் - மத்திய ரிசர்வ் போலீசால் இழுத்துச் செல்லப்படும் அசாமியர் படுகொலைக்குத் தப்பியவர்களுக்குச் சிறை!




என்கிறார்கள் காஷ்மீரி முஸ்லீம்கள்.

எனவே தங்கள் தலைவிதியை தீர்மானித்துக்கொள்ள தங்களுக்கே உரிமை வேண்டும் என்று போராடுகிறார்கள். வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் அவர்களது கடைகளை உடைத்துச் சூறையாடுகிறது போலீசு. உள்ளூர் தலைவர்களை ஆர்ப்பாட்டங்களின் போது நேரடியாக சுட்டுக் கொல்கிறது. இங்கு கதறி அழுபவர்கள், அவ்வாறு தங்கள் சகோதரனை பறி கொடுத்தவர்கள்.

வாழ்வு பறிக்கப்பட்டவர்கள், வாழ்க்கைத் தேவைகளுக்காக போராடுபவர்கள் — அவர்களின் போராட்டங்களில் உள்ள நியாயங்கள் பற்றியெல்லாம் போலீசு கவலைப்படுவதில்லை. ''நான் எஜமானனை எதிர்ப்பதில்லை. அதற்கு அவனும் விடுவதில்லை. நீயும் எனக்கு கீழ்படி. என்னை எஜமானனாக ஏற்றுக் கொள்'' — இதுதான் போலீசு 'தத்துவம்'!

அரசியல் சட்டத்தின் வரம்புக் குட்பட்டே தனி மாநிலம் கோரி போராடும் அசாம், 'போடோ'; பீகார் 'ஜார்கண்ட்' இன மக்களை



'ஆண் ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு பெண் வழக்கு தொடுப்பதா? அதற்கு ஒரு கூட்டம் ஆதரவளிப்பதா?' - ஷா பானுவிற்கு ஆதரவாக பாட்னாவில் நடந்த ஊர்வலத்தில் போலீசு மிருகங்கள் கண்ணீர் புகைக்குண்டுவீச்சு, தடியடி.



'இனி இச்சிறுமியின் எதிர்காலத்துக்கு யார் பொறுப்பு?' மார்ச் '89 — அசாம் போலீசால் கற்பழிக்கப்பட்ட 12 வயது போடோ இன சிறுமி பாசுமதாரி.

வெறியோடு ஒடுக்குகிறது, போலீசு. போராடும் பழங்குடி கிராமங்களுக்குச் சென்று, கிராமம் கிராமமாக வெகுஜன கற்பழிப்புகளை நடத்துகிறது. அவர்களின் தானியங்களையும் விளைநிலங்களையும் தீக்கிரையாக்குகிறது. குளம், குட்டைகளிலும் விஷம் கலந்து பீதியை ஏற்படுத்தி அவர்களைப் பட்டினியால் சாகடிக்கிறது.

தங்கள் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு, அணு சோதனை நிலையங்களையும், ஏவுகணைத் தளங்களையும் அமைக்கும் அரசுக்கு எதிராக போராடும் மக்களை சுற்றிவளைத்து தாக்குகிறது. கிராமம் கிராமமாக மிரட்டி அவர்களை வெளியேற்றுகிறது. அணைக் கட்டுவதற்கும், கனிப் பொருள் சோதனைக்கும் தங்கள் இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு நட்டாற்று தரமறுக்கும் அரசுக்கு எதிராக போராடுபவர்கள், தங்களது தனிமனித உரிமையில் குறுக்கீடும் 'ஷாரியத்' மதவெறி சட்டங்களை எதிர்ப்பவரைக்கூட மூர்க்கமாக ஒடுக்கிறது.



1987 - மீரட்: போலீசு, ராணுவத்தால் கொல்லப்பட்ட மல்லியானா கிராமத்தின் அப்பாவி முஸ்லீம்கள் புதைக்கப்படுகிறார்கள்.




இந்து ராஜ்ஜியத்தில் முஸ்லீம்கள் போராடுவதா?' கலகக்காரர்களைக் கைது செய்வதாகக் கூறி முஸ்லீம்களை மட்டும் சுற்றி வளைத்திருக்கும் ராணுவம்:

குறிப்பாக, இந்து - முஸ்லீம் கலவரங்களில் போலீசும் துணை ராணுவமும் சேர்ந்து கொண்டு முஸ்லீம்களை நரவேட்டையாடுகிறது. முஸ்லீம்களாக இருந்தால் விசாரணையே இல்லாமல் கண்மூடித்தனமாக தாக்குகிறது. இந்து - முஸ்லீம் கலவரத்தில் ஒவ்வொரு முறையும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

'87 ஆம் ஆண்டு மே மாதம் பதற்ற நிலைமையை தணிப்பது என்ற பெயரில் அங்குசென்ற போலீசு பட்டாளம், மீரட் அருகில் மல்லியானாவில் முஸ்லீம்களை உயிரோடு எரித்தது. 2 மணிநேரத்தில் கிராமம் முழுவதுமாக தீக்கிரையாக்கியது. பல முஸ்லீம்கள் குடிசையோடு எரிந்து சாம்பலானார்கள். தப்பியோடியவர்களை துரத்தித்துரத்தி சுட்டுக் கொன்றது, போலீசு.



1984 - பிவாந்தி - மத்திய ரிசர்வ் போலீசின் இந்து மத வெறியாட்டம். சமயம் கிடைக்கும் போதெல்லாம் முஸ்லீம்களை வேட்டையாடுகிறது போலீசு.



மல்லியானா - கங்கை கால்வாயில் மிதக்கும் முஸ்லீம் பிணம். சுட்டுக்கொன்று நூற்றுக்கும் மேற்பட்டவர்களை ''சாக்கு மூட்டை''களில் கட்டி கால்வாயில் வீசியெறிந்தது போலீசு.

பிணங்களை கொத்துக்கொத்தாக அருகில் ஓடிய கங்கைக் கால்வாயில் வீசியெறிந்தது.

கண்டுபிடிக்கப்பட்ட பிணங்கள் மட்டும் 150. ஆனாலும் அரசு 7 பேர்கள்தான் இறந்தனர் என திரும்பத் திரும்ப சாதித்தது. பிணங்களுக்கு ''சாக்கு மூட்டைகள்'' என்று பெயரிட்டு ரசித்தது போலீசு. ஏறக்குறைய 20 கோடி ரூபாய்க்கும் அதிகமான முஸ்லீம் மக்களின் சொத்துக்கள் போலீசால் சூறையாடப்பட்டன.

'84 ஆம் ஆண்டு மே மாதம் பம்பாய் - பிவாந்தியில் முஸ்லீம்கள் நட்ட நடுவீதியில் வெட்டி வீசப்பட்டனர். 100க்கும் மேற்பட்ட முஸ்லீம் பிணங்கள் பிவாந்தி நகரம் முழுவதும் இறைக்கப்பட்டன. ''புற்றுநோயாக நாட்டை அரிக்கும் முஸ்லீம் மதத்தை ஒழிப்பது'' என்ற சிவசேனாவின் இந்து மதவெறியர்களுடன் இணைந்து போலீசு முஸ்லீம்களை வேட்டையாடியது. கல்யாண், செம்பூர், பிவாந்தி நகரங்களிலிருந்த



1984 - டெல்லி - சீக்கியர்களை கொல்வதிலும் சூறையாடுவதிலும் காங்கிரசு குண்டர்களுடன் போலீசு கூட்டு.

முஸ்லீம் கடைகளில் பல கோடி ரூபாய் பொருட்களை போலீசு சூறையாடியது.

அரசு புள்ளிவிவரப்படியே 1000க்கும் மேற்பட்ட மதக்கலவரங்கள் நாடு முழுக்க ஆண்டுதோறும் நடக்கின்றன. இவ்வளவும் சிறுபான்மை மதத்தினர் மீது போலீசும் இந்து மதவெறியர்களும் கட்டவிழ்த்துவிடும் கலவரங்கள்.


தங்கள் அதிகாரத்தை மக்கள் தட்டிக் கேட்கும்போது அவர்களுக்குள் சாதிவெறியைத் தூண்டி பிளவை ஏற்படுத்துகிறது போலீசு. குஜராத் மாநிலத்தில் தொடர்ந்த இட ஒதுக்கீட்டுக்கான போராட்டத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எதிராக மேல்சாதி இந்துக்களை வெறியோடு உசுப்பிவிட்டது.

போராடியவர்கள் நடுவீதியில் உயிரோடு எரிக்கப்பட்டனர். அவர்களது கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. வீடுவீடாக சோதனை செய்து பேராடியவர்களை கைது செய்து மிருகத்தனமாக சித்திரவதை செய்தது போலீசு. இழுத்துச் செல்லப்பட்ட இளைஞர்களைப் பற்றி பல நாட்கள் விபரம் இல்லை. பல இளைஞர்கள் இதுநாள் வரையில் வீடு திரும்பவில்லை.

தமிழ்நாட்டில் மண்டைக்காடு, விழுப்புரம் சாதிக் கலவரங்களின் போது தாழ்த்தப்பட்டவர்கள் கும்பல் கும்பலாக வெட்டிக் கொல்லப்பட்டனர். குற்றவாளிகள் மீது இது நாள் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, போலீசு.

அனைத்திற்கும் மேலாக, பஞ்சாப் மக்களின் மீது 6 ஆண்டுகளாக அறிவிக்கப்படாத யுத்தத்தை நடத்துகிறது பாசிச ராஜீவ் அரசு. பஞ்சாப் மாநிலம் முழுவதும் அரசு பயங்கரவாத போலீசு - இராணுவ ஆட்சி நிறுவப்பட்டுள்ளது. கிராமம் கிராமமாக சூறையாடுவது, தண்டம் வசூலிப்பதுடன் தண்டிப்பதை தனது கேள்விக்கிடமற்ற உரிமையாக்கிவிட்டது, போலீசு.

தீவிரவாதிகளை தேடிக் கண்டுப்பிடிப்பது என்ற பெயரில் கிராம மக்களை மொத்தமாக இழுத்து வந்து கும்பல் கும்பலாக சித்ரவதை செய்கிறது. நடு இரவில் கும்பலாகச் சென்று கிராம மக்களை மிரட்டுகிறது. காரணமில்லாமலேயே நூற்றுக்



'அதிகாரமிருக்கிறது அடித்து நொறுக்கு, பயங்கரவாதி என்று முத்திரை குத்து' - சீக்கிய இளைஞர்களை திரள் திரளாக வேட்டையாடுகிறது போலீசு.




டெல்லி: அப்பாவி தாழ்த்தப்பட்டவர்கள் மீது கள்ளச் சாராயம் காய்ச்சியதாகப் பொய்வழக்குப் போட்டு அவர்களைக் கைது செய்து கழுதைமேல் ஏற்றி ஊர்வலம் விட்டது சாதிவெறி பிடித்த போலீசு. பிறகு அது பொய்வழக்குதான் என்று கோர்ட்டில் நிருபணமாயிற்று. போலீசை எதிர்த்து மானநட்ட வழக்கு தொடுத்துள்ளனர் பாதிக்கப் பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள்.

கணக்கான இளைஞர்களை கைது செய்து சுட்டுக் கொன்று மோதலில் இறந்ததாக அறிவிக்கிறது. கிராம மக்களின் விளைநிலங்களையும் வீடுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டு மக்களை கிராமத்தை விட்டே விரட்டுகிறது. அமைதியை நிலைநாட்டுவதாகச் சொல்லி மயான அமைதியை நிலைநாட்டுகிறது.

போலீசு, அரசு எந்திரத்தின் அடக்குமுறை கருவி என்பதோடு அதன் அதிகாரம் முடிந்து விடுவதில்லை. அது தானே தனி ஒருவகை ஜாதி என்ற ரீதியில் மிகப்பெரும் கிரிமினல் கும்பல். அமைப்பு ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டு அதிகாரத்தோடு ஆயுதத்தையும் ஏந்தியிருக்கும் ஒரு கொடிய மிருகம். மக்களின் மீதே அமர்ந்து கொண்டு மக்களின் கழுத்தை நெறிக்கும் புல்லுருவி.


நியாய, அநியாயங்களுக்கு போலீசு அகராதியில் இடமில்லை. மக்களும் அவ்வாறு சிந்திப்பதையோ உரிமைக்கு குரல் கொடுப்பதையோ போலீசு மிருகங்கள் சகித்துக் கொள்ளாது. தன்னை மாதிரியே மக்களும் மந்தைகளாக மாறவேண்டும் என்பதுதான் போலீசு கிரிமினல்களின் வக்கிரத்திற்கு அடித்தளம்.

பீகார்!
நக்சல்பாரிகள் என்று சந்தேகிக்கப்படுவோருக்கு நேரும் கதி!
இதுதான் இந்திய ஜனநாயகம்!





'82 - தமிழ்நாட்டில் 32 நக்சல்பாரி புரட்சியாளர்களை படு கொலை செய்தது போலீசு. மேலும் யாராவது இருக்கிறார்களா என்று தருமபுரி கிராமங்களில் மோப்பம் பிடிக்கிறது போலீசு!



1981 - ஆந்திர மாநிலம் இந்திர வல்லி. இ.பொ.க (மா.லெ) மக்கள் யுத்தக் குழுவின் தலைமையில் போராடிய கோண்டு பழங்குடியினர் 60 பேரை மொத்தமாக படுகொலை செய்தது போலீசு. அவர்களுக்கு எழுப்பப்பட்ட நினைவு தூணையும் இடித்து தரைமட்டமாக்கின போலீசு மிருகங்கள்.

உடமை, உரிமை, உயிர், மானம் — எது பறிக்கப்பட்டாலும் மக்கள் பேராடக்கூடாது. அப்படி சிந்திப்பதே பெரிய குற்றம் — இது தான் போலீசின் அகராதி!

போலீசின் இந்த அதிகார வெறியை நேரடியாக தகர்த்தெறிய நக்சல்பாரிகள் மக்களை அறைகூவி அழைக்கிறார்கள். போலீசிடம் மன்றாட அல்ல; அதற்கு ஈவிரக்கமின்றி பதிலடிக் கொடுக்க மக்களை அமைப்பாக்குகிறார்கள்.

நக்சல்பாரிகள் எங்கெல்லாம் மக்களை திரட்டுகிறார்களோ அங்கெல்லாம் போலீசின் அதிகாரம் முடமாகிறது. எனவே, நக்சல்பாரிகளையும், அதன் அமைப்புகளையும் முளையிலேயே கிள்ளியெறிய போலீசு மூர்க்கமாகப் பாய்கிறது. அவதூறு முதல் சித்திரவதை - படுகொலை வரை அனைத்து ஆயுதங்களையும் பிரயோகிக்கிறது.

நக்சல்பாரிகள் என்றாலே, கொலை, கொள்ளையில் ஈடுபடும் கிரிமினல்கள் ''தலைவெட்டும்'' கும்பல்கள், குடும்பத்துக்கு அடங்காமல் ஓடிவந்து தலைமறைவாக



**பீகார்: நக்சல்பாரிகள் என போலீசால் சந்தேகிக்கப்படுவோருக்கு நேரும் கதி!**


வழக்கு கிடையாது! விசாரணையும் கிடையாது! 'போலீசுடன் மோதல்' என்ற பெயரில் படுகொலைதான்!



ஆந்திர போலீசால் பட்டப்பகலில் வீடு புகுந்து கொலை செய்யப்பட்ட சிவில் உரிமைக் கழகத் தலைவர் ராமநாதம்.



அதிபட்ல கைலாசம்: நக்சல்பாரி எழுச்சியின் ஆந்திர மாநில முன்னோடி. ஸ்ரீகாகுளம் விவசாயிகள் போராட்டத் தலைவர். 'மோதல்' என்ற பெயரில் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



வேம்படப்பு சத்யம்: ஆரம்பப்பள்ளி ஆசிரியராக இருந்து புரட்சியாளராக வளர்ந்தவர். ஸ்ரீகாகுளம் போராட்டத் தலைவரான இவரும் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, சட்டவிரோதமாக லாக்கப்பில் மிகக்குரூரமாக சித்திரவதை செய்யப்பட்ட கர்நாடக மாநில சிவில் உரிமைக் கழகத் தலைவர் பாப்பையா.



பத்மா: கல்லூரி மாணவி. ஆந்திர மாநில முற்போக்கு மாணவர் சங்க உறுப்பினர் என்ற காரணத்திற்காக போலீஸ் நாய்கள் இவரைக் கடத்திச் சென்று கற்பழித்தன.



அர்ச்சனா: நக்சல்பாரி இயக்கததைச் சார்ந்தவர். மே.வங்க போலீசின் சித்திர வதையினால் நிரந்தர நோயாளியாக்கப் பட்டார்.



போலீசால் கைது செய்யப்பட்ட 7 வயதுச் சிறுவன் பாவெல். நக்சல்பாரி அரசியலை ஆதரிக்கும் முற்போக்கு இளைஞர் அணி செயல்வீரன். இவனுடைய பிஞ்சு விரல் நீதிமன்றத்தை நோக்கி நூறு கேள்விகள் கேட்டது. போலீசின் 'வீரம்' இவன் முன் கேவிக்குள்ளாகியது.

அலைந்துதிரியும் கிரிமினல் கும்பல் - இப்படி எந்தக் கடைக்கோடி தன்மைக்கும் சென்று அவதூறு செய்கிறது. மறுபுறம், நக்சல்பாரிகளை நர வேட்டையாடுகிறது.

உழுபவருக்கே நிலம், உழைப்பவருக்கே அதிகாரம்; தேர்தல் பாதை திருடர் பாதை; மக்கள் பாதை, புரட்சிப் பாதை — என்று முழங்கிப் போராடும், அமைப்புகளை பூண்டோடு ஒழிக்க போலீசு தனது மிருகபலம் அனைத்தையும் பயன்படுத்துகிறது. இதற்காகவே கருணாநிதியின் முந்தைய ஆட்சி 'கியூ' பிரிவு எனப்படும் தனி போலீசு படையை உருவாக்கியது.

குறிப்பாக, ஆந்திரா, தமிழ் நாடு, பீகார், மே.வங்கம், கேரளா மாநில போலீசு, நக்சல்பாரிகள் மீது மனிதத்தன்மையற்ற சித்திரவதைகள், படுகொலைகளை நடத்தியது. தமிழகத்தில் '79-80 ஆம் ஆண்டுகளில் மோகன்தாஸ், தேவாரம் தலைமையிலான போலீசு கும்பல் 32 புரட்சியாளர்களை படுகொலை செய்தது. அப்பு, சீராளன், பாலன், ராஜன், சிநேகலதா போன்ற புரட்சியாளர்களை, கொதிக்கும் தார் டிரம்மிலும், ஆணுறுப்புகளை நசுக்கியும், பெண்ணுறுப்பில் தடியை சொருகியும் சித்திரவதை செய்து படுகொலை செய்தது போலீசு.



'சூதாடலாம் - ஆனால் அதிகாரிகளுடன் வாதாடக்கூடாது!' சீட்டாடுகிறார்கள் சட்டம் ஒழுங்கின் காவலர்கள்



போலீஸ் உயரதிகாரி ரிபெய்ரோவுக்கு குடை பிடிக்கிறார் ஒரு கான்ஸ்டபிள். அடிமைகள் குடைதான் பிடிக்க வேண்டும். உரிமைக்காகக் கொடி பிடித்தால்...?

சகல பிரிவு மக்களையும் ஒடுக்கிய போலீசு தனது உரிமைகளுக்காக தனது எஜமானனிடம் குரல் கொடுத்த போது அவன் இராணுவத்தை வைத்து குரல்வளையையே நொறுக்கினான். நைனார்தாஸ் மற்றும் பிரிட்டோ தலைமையில் தங்களுக்குள் போலீசார் சங்கம் அமைத்தனர். எம்.ஜி.ஆர். மத்திய ரிசர்வ் படையை வைத்து சங்கத்தில் திரண்டவர்களை வேட்டையாடினார். தலைவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். போலீசு குடியிருப்புகள் தாக்கப்பட்டன.

'82 ஆம் ஆண்டு குஜராத், உத்திரப்பிரதேசம் மற்றும் பம்பாயில் பதவி உயர்வு, குடியிருப்பு அடிப்படை வசதிகள், தங்கள் குழந்தைகளுக்கான இலவசக் கல்வி — இவற்றுக்காக போலீசார் போராடினார்கள். வழக்கமான போலீசு பாணியிலேயே போலீசாரை கைது செய்து சிறையிலடைத்தது ராணுவம். விசாரணை இல்லை. 'வாரண்ட்' இல்லை. இரண்டு மணிநேரத்திற்கு முன் பிரசவித்த தனது மனைவியை கவனித்துக் கொண்டிருந்த போலீசைக்கூட மிருகத்தனமாக இழுத்துச் சென்றது ராணுவம்.

தேசீய பாதுகாப்பு சட்டம், பிரிவு 120 ஏ, 151 போன்ற கிரிமினல் சட்டங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிர்ப்பைத் தெரிவிக்க கறுப்பு அட்டை அணிந்த போலீசாருக்கும் தண்டனை வழங்கியது, அரசு. '87 ஆம் ஆண்டு குஜராத்தில் போராடிய போலீசாரையும் ராணுவம் ஒடுக்கியது.

மனிதாபிமானமாக நடந்து கொண்ட போலீசாரை கிரிமினல்களை வைத்து சக போலீசாரே படுகொலை செய்த சம்பவம் கூட போலீசில் உண்டு.

ஜார்ஜ் சோமன், ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு எஸ்.ஐ. யாக வந்தவர், '81 ஆம் ஆண்டில் கேரள மாநிலம் பன்னூர் போலீசு நிலையத்தில் பணிபுரிந்தார். தனக்கு கீழிருந்த இரண்டு போலீசுகாரர்கள், விபச்சாரிகளுடன் கள்ள உறவு வைத்துக்கொண்டு அத்தொழிலை ஊக்குவித்ததைக் கண்டித்தார். அதே போலீசுக்காரன் லாரி டிரை




உரிமைக்காகக் கொடி பிடித்த பம்பாய் போலீசாருக்கெதிராக மத்திய ரிசர்வ் போலீசுப் படையும் ராணுவமும் துப்பாக்கியை நீட்டுகின்றன.



வர்களிடம் மாமூல் வாங்கியதை நேரிடையாகப் பிடித்தார்.

அதன்பிறகு, அவருக்கு "அன்புள்ள நாயே... உன் முடிவு நெருங்குகிறது" என்று மொட்டைக் கடிதம் வந்தது. அதை மேலதிகாரிகளிடம் காண்பித்த ஜார்ஜ் சோமனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. "போலீசுகாரன்களுக்கு இதெல்லாம் சகஜம்" என்று கிண்டலடித்தான் உயரதிகாரி. '81 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12ம் தேதி பட்டப்பகலில் அவரது இருக்கையிலேயே வைத்து அவரை சுட்டுக் கொன்று, அவர் தற்கொலை செய்துகொண்டதாக வழக்கு ஜோடித்தது, போலீசு.

கல்கத்தா. '84 ஆம் ஆண்டு வி.கே.மேத்தா என்ற லால் பஜார் சரக போலீசு துணை கமிஷனரை இத்ரிஸ் மியான் என்ற கிரிமினல் கும்பலின் தலைவன் படுகொலை செய்தான். தங்களுக்கும் அப்பகுதி மஃபியா கும்பலுக்கும் இருந்த கள்ள உறவை அப்போலீசு அதிகாரி எதிர்த்தவர் என்பதால், ஒரு பிரிவு






கழுத்தில் கை வைத்து கிரிமினலைப் போல இழுத்துச்செல்லப்படுபவர் குஜராத்போலீஸ் சங்கத் தலைவர். இவர் செய்த குற்றம்? வேலைநிறுத்தத்தைத் தூண்டியது.

**போலீஸ் ஆளெடுப்பு:** அதிகாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் கூழைக் கும்பிடுபோடுவதற்கு 'பரந்த மார்பு' எதற்கு?

போலீசு கும்பல் அந்த கிரிமினலை அமர்த்தி அவரைப் படுகொலை செய்தது. இந்த ரகசியம் வெளிவராமல் தடுக்க சம்பந்தப்பட்ட கிரிமினலையும் 'லாக்-அப்'பில் வைத்து படுகொலை செய்தது போலீசு.

உயர்மட்ட போலீசு அதிகாரிகள் கிரிமினல்களுடன் கூடிக் குலாவுவது பகிரங்கமாக நடக்கிறது. மந்திரிகளுடன் உள்ளூர் குட்டித் தலைவர்கள் சேர்ந்து புகைப்படம் எடுக்கப் போட்டிப் போடுவது போல, மஃபியாக்களுடன் போலீசு பல்லிளிப்பதற்கு போட்டி போடுகிறது. போலீசு உயரதிகாரிகளின் செல்வாக்கு, அதிகாரம், பிரபலம் இந்த முறையில்தான் நிலைநாட்டப்படுகிறது.




மேற்கு வங்கம்: உதவி கமிஷனர் மேத்தாவின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட **இத்ரிஸ்மியான்.** உயிரோடு இருந்தால் தங்கள் குட்டு வெளிப்பட்டுவிடும் என்று இவனை லாக்-அப்பிலேயே கொலை செய்தனர் காக்கிச்சட்டைக் கொலைகாரர்கள்.




மாஃபியா கும்பலை எதிர்த்ததால் சக போலீசாரால் சதிசெய்து கொல்லப்பட்ட போலீஸ் **அதிகாரி மேத்தா.**

லஞ்ச வழக்குக்கு உடன்படாததால் போலீஸ் நிலையத்திலேயே கொலைப் பட்ட எஸ்.ஐ.சோமன்





நாராயணன்



விஜயராகவன்



ராஜன்

**சோமனை சுட்டுக்கொன்ற போலீஸ் கொலையாளிகள்:**

அரசாங்கமே தனக்கு பிடிக்காத ஒரு போலீசு அதிகாரியின் மீது கை வைப்பதற்கு மிரளுமளவுக்கு இந்த கூட்டு நெருக்கமாக இருக்கிறது. கல்கத்தாவில் அதிகாரியை கொன்ற போலீசு இந்த முறையில் ஜோதிபாசு அரசாங்கத்தை மிரட்டிதான் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டது. அப்படியே தண்டிக்கப்பட்டால், சம்மந்தப்பட்ட மஃபியாக்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள கள்ளத் தொடர்பை போட்டுடைக்கிறது, போலீசு.

சமீபத்தில் சென்னை ஆட்டோ சங்கர் விவகாரமும் இதைத்தான் நிரூபித்தது. தேவாரம் - துரை தலைமையிலான போட்டி போலீசு கும்பல்களுக்குள் ஏற்பட்ட அதிகார மோதல்தான் ஆட்டோ சங்கர் விவகாரத்தை வெளியில் கொண்டுவந்தது.

ஆட்டோ சங்கரிடம் பறிக்கப்பட்ட வீடியோ படச்சுருளிலும், அவனிடம் கள்ள உறவுக்கொண்டிருந்த போட்டி போலீசு கும்பல்களிடமிருந்த வீடியோ படச்சுருளிலும் பல போலீசு உயரதிகாரிகள் இருந்ததை ஜூனியர் விகடன் ஏடு ஒப்புக்கொண்டது யாவரும் அறிந்தது. கைது செய்யப்பட்ட ''அழகி''கள் கொடுத்த வாக்குமூலத்தில், எம்.ஜி. ஆர். - ஜானகி மந்திரிசபையில் இருந்த பல முக்கிய மந்திரிகளும், எம்.எல்.ஏ.க்களும் ஆட்டோ சங்கர் தயவில் ''அழகி''களை அனுபவித்த விசயம்கூட வெளியில் வந்தது.

பம்பாய், மஃபியா வரதராஜ முதலியார் பம்பாய் போலீசையே விலை பேசியவன். போட்டி மஃபியா கும்பலை கைது செய்து போலீசு 'லாக்-அப்'பிலேயே அவர்களை படுகொலை செய்ய வரதராஜனுக்கு முழு சுதந்திரம் கொடுத்தது போலீசு. பம்பாய் போலீசின் பல உயரதிகாரிகள் தன்னோடும் ''அழகி''களோடும் கும்மாளம் அடிப்பதை முதன் மந்திரிகளுக்கே நேரடியாக போட்டுக்காட்டி அவர்களை மிரட்டியவன் வரதராஜ முதலியார்.

**கொ**லை, கொள்ளை, கடத்தல் குற்றங்களில் 9 வழக்குகளின்



சர்வதேச கிரிமினல் சோப்ராஜ்! தில்லி சிறையிலிருந்து தப்பிச் சென்று பிடிபட்ட பின்னரும் கோர்ட்டுக்கு கொண்டு வரும்போது கைவிலங்கு கிடையாது!



பூலன் தேவி: எத்தனை கொலை, கொள்ளை செய்திருந்தால் என்ன? அரச மரியாதையுடன் 'சரணடைவு' விழா. அருகில் - அன்றைய ம.பி.முதல்வர் அர்ஜுன் சிங்.



ஆட்டோ சங்கர்: போலீசுக்காரர்கள் கூட்டாளிகள்; அரசியல்வாதிகள் வாடிக்கையாளர்கள்!

கீழ் கைது செய்யப்பட்ட சர்வதேச கிரிமினல் சோப்ராஜ் டில்லி - திகார் சிறையிலிருந்த சிறை உயர் போலீசு அதிகாரிகளின் துணையுடன் தப்பிச் சென்றது; சிறைக்குள் இருக்கும் போதும், கோர்ட்டுக்கு கொண்டுவரப்பட்ட போதும் அவனை போலீசுக் கும்பல் ராஜ உபசாரத்துடன் நடத்தியது; போலி ஆதாரங்களைக் காட்டி, இந்தியன் வங்கி லண்டன் கிளையை ஏமாற்றிய ரஜேந்திர சேத்தி, இந்திய ராணுவ ரகசியங்களைக் கடத்திச் சென்ற ராமா ஸ்வரூப், சம்பல் கொள்ளைகாரி பூலான் தேவி — இப்படி அனேக கொடிய கிரிமினல்களை போலீசு மதிப்பு மிக்க மன்னர்களைப் போலவே நடத்தியது.

''போலீசு'' எல்லோருக்கும் பொதுவாது அல்ல. அது மக்களின் எதிரி. கிரிமினல்களின் நண்பன். அதே போல் போலீசு நீதியின் நிலைக்களன் அல்ல, கிரிமினல்களின் கூடாரம். இயல்பாகவே, கொடிய கிரிமினல்களுக்கு கும்பிடு போடும் தொடைநடுங்கி கூட்டம். ஏழை எளியவர்களைக் கடித்து குதறும் 'பங்களா' நாய்! உள்ளூர் ரௌடிகளிடம் வாலாட்டும் சூரப்புலி! ஏமாந்தவர்களிடம் 'வீரம்' பேசும் வெண்ணெய் வெட்டி சிப்பாய்!

''குற்றவாளிகளை தண்டிக்க முடியாவிட்டாலும், தவறியும் எந்தவொரு நிரபராதியும் தண்டிக்கப்பட்





← லார்கின்ஸ் ராமா ஸ்வரூப் ↑
↙ கூமர் நாராயண்

குரு பக்தி! இந்திய ராணுவ ரகசியங்களைத் திருடி வெளிநாடுகளுக்கு விற்ற தேசத் துரோகிகளை மிகவும் மரியாதையாக கோர்ட்டுக்குக் கொண்டு செல்கிறது போலீசு.



டுவிடக் கூடாது'' என்று பீற்றிக் கொள்கிறது நீதித்துறை. இதன் வழியில்தான் நீதிமன்றமும், போலீசும் நடைபோடுகிறது என்கிறது அரசாங்கம்.

நிரபராதிகள் நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது இருக்கட்டும்! நிரபராதிகள் போலீசு மிருகங்களின் அட்டூழியங்களுக்கு ஆளான போது, தெரிந்தும் வாய்மூடி இருந்தன அரசும் அதன் ஒரு அங்கமான நீதிமன்றங்களும். அதற்கு வக்காலத்து வாங்கின. இட்டுக்கட்டப்பட்ட கதைகள் என கூசாமல் புளுகின. நிரூபிக்கப்பட்டபிறகும் போலீசை தண்டிக்காமல் பின்வாங்கின. வழக்கை இழுத்தடித்து வெட்கமில்லாமல் நிரபராதியை பணிந்துபோக உபதேசம் செய்தன.

புரட்சியாளர்களின் மீதான போலீசு படுகொலைகளையும், தாழ்த்தப்பட்ட பெண்களை போலீசு கற்பழித்த போதும் அப்பட்டமாக போலீசின் பக்கம் நின்றன அரசும் நீதிமன்றங்களும். ''ஏழைகள் ஒழுக்கநெறியற்றவர்கள். அவர்கள் புளுகவும் தயங்கமாட்டார்கள்'' என்று பராரியா கிராமத்து சகோதரிகள் போலீசால் கற்பழிக்கப்பட்டதற்கு தீர்ப்பு வழங்கியது, நீதிமன்றம்.

முன்னாள் மந்திரியாக இருந்தாலென்ன?
ரயில் மறியல் நடத்த முயன்ற
ஜார்ஜ் பெர்னாண்டஸுக்கு நேர்ந்த கதி!





போலீசு லத்திக் கம்பால் பட்டை பட்டையாக உரிக்கப்பட்டிருப்பவர் ஒரு தெலுங்கு தேசக் கட்சி எம்.பி. ராஜீவை எதிர்த்த பாரத் பந்தின்போது மறியல் செய்ய முனைந்த தற்கு போலீசு தந்த பரிசு!

உழைக்கும் மக்களை மட்டுமல்ல, இந்த அரசியல் சட்ட திட்டங்களை ஏற்றுக் கொண்டு பாராளுமன்றம், சட்டமன்றங்களில் வீற்றிருக்கும் 'மாபெரும்' தலைவர்களைக் கூட போலீசு பந்தாடியிருக்கிறது. எந்த கொம்பனாக இருந்தாலும் போலீசை, அரசை, ஆளுங்கட்சியை எதிர்த்து பேசக்கூடாது. எதிர்ப்பை வெளிக்காட்டக்கூடாது. எதிர்ப்பைத் தெரிவிக்க ஆர்ப்பாட்டம் நடத்துவதோ கோஷம் எழுப்புவதோ கூட அல்ல, உண்ணாவிரதமிருக்கக் கூட உரிமை கிடையாது.

அது 'சட்டம் - ஒழுங்கை' பாதுகாக்கும், 'அமைதி'யை நிலைநாட்டும் போலீசை அவமானப்படுத்துவது போலாகும்! அமைதி! மயான அமைதி! இதை சீர்குலைக்கும் எவரையும் முட்டியை உடைக்கும் போலீசு ஜானகி ஆட்சியின் போது, எதிர்தரப்பின் மீதான ஆளுங்கட்சியின் வசவுகளை காது குளிர கேட்டு அமைதி காக்க தவறிய எம்.எல்.ஏக்களை ரத்தம் சொட்ட, சொட்ட அடித்தது, போலீசு. இந்திரா தங்களது ஆட்சியை கலைத்ததற்கு எதிராக டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்திய தெலுங்குதேச எம்.எல்.ஏ.க்களை படுக்கவைத்து மிதித்தது, போலீசு. பல மாநிலங்களிலும், பாராளுமன்றத்திலும் ஆளுங்கட்சியைக் கேள்விக்கேட்ட, எதிர்க்கட்சியினரை குண்டு கட்டாக தூக்கி வெளியில் போட்டது போலீசு. ஜனநாயகம்! அது போலீசு லத்திக்கு மட்டுமே சொந்தமானது!

இங்கிருக்கும் எண்ணற்ற படங்கள் விபரங்கள் - போலீசு மிருகங்கள் மக்களின் மீது இழைத்த ரத்தம் உறைய வைக்கும் குற்றங்களுக்கு சாட்சியங்கள். இவை அனைத்தும் உழைக்கும் பத்திரிக்கையாளர்களால் உயிரைப் பணயம் வைத்து திரட்டப்பட்ட செய்திகள். போலீசு மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட குரூரங்கள் ரத்தம் தோய்ந்தவை; கணக்கிலடங்காதவை. அவற்றில் ஒரு துளியைமட்டும் தான் இங்கு உங்கள் முன் தொகுத்தளிக்க முடிந்தது.

எங்களால் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமுள்ள நூற்றுக்கணக்கான உழைக்கும் பத்திரிக்கையாளர்



துப்பாக்கிக் கட்டையால் அடித்து நொறுக்கப்பட்ட பத்திரிக்கையாளர் சல்மான் ரவி.


↑ நடுவீதியில் கயிற்றால் கட்டி இழுத்துச் செல்லப்படுகிறாரே இவர் கிரிமினல் அல்ல; நவபாரத் டைம்ஸ் பத்திரிக்கை நிருபர் அசோக் வர்மா.




ஜூலை '89 - ஜார்கண்ட் விடுதலை முன்னணி நடத்திய ஊர்வலத்தின்மீது போலீசு நடத்திய மிருகத்தனமான தாக்குதலை புகைப்படமெடுக்க முயன்ற பத் திரிக்கையாளர்களின் காமெராக்கள் உடைக்கப்பட்டன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்காக அசோக் வர்மா, சல்மான் ரவி ஆகிய பத்திரிக்கையாளர் கள் சித்திரவதை செய்யப்பட்டனர். பொய் வழக்குகள் போடப்பட்டன. சித்திரவதையின் கொடூரத்தால் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட போது அருகிலிருந்த படுக்கைகளிலெல்லாம் போலீஸ் நாய்கள் நோயாளிகளைப் போலப் படுத்திருந்தன. மருத்துவமனையிலும் கொலை மிரட்டல்!

களால், பல போராட்டங்களுக்கு மத்தியில் இந்த ஒரு துளி விபரங்களைத்தான் சேகரிக்க முடிந்தது. போலீசின் மற்ற அனைத்து குரூரங்களும் அதன் கனத்த கால் 'பூட்ஸ்'களால் தடயமின்றி அழிக்கப்பட்டு விட்டன. சிறைக் கம்பிகளுக்குள்ளேயே, போலீசு நிலையத்தின் நான்கு சுவர்களுக்குள்ளேயே போலீசு மிருகங்கள் மறைத்துவிட்டன. உழைக்கும் மக்களை துப்பாக்கி முனையில் கிழித்தெறிவது போலவே, அதன் குரூரங்களுக்கான சாட்சியங்கள் அனைத்தையும் ரத்தத்தில் மூழ்கடித்துவிட்டது.

போலீசு மிருகங்களை அதன் குகையிலேயே சந்தித்த உழைக்கும் பத்திரிக்கையாளர்களால்தான் சிறைக் கொட்டடியின் ரத்தக் கறைகளில் ஒரு துளியாவது வெளி உலகுக்குள் தெறித்து விழுந்தது; தெரியவந்தது. அந்த வீரம் செறிந்த உழைக்கும்



பீகார் - 1982: காங்கிரஸ் முதல்வர் ஜகன்னாத் மிஸ்ராவின் பத்திரிக்கைத் தணிக்கை மசோதாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் பீகார் பத்திரிக்கையாளர்கள் மீது பாய்ந்து குதறுகிறது போலீசு.



குஜராத்: இட ஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டத்தின் போது போலீசு நடத்திய அட்டூழி யங்களை அம்பலப்படுத்தியதற்காக குஜராத் சமாச்சார் பத்திரிக்கை அலுவலகத்தை சூறையாடி தீ வைத்தது போலீசு கும்பல்.

பத்திரிக்கையாளர்களின் வாயில் தன்னுடைய மூத்திரத்தை ஊற்றியது போலீசு. அவர்களின் மண்டையைப் பிளந்தது. கிரிமினல் குற்றவாளிகள் போல் அவர்களை கயிறு கட்டி இழுத்துச் சென்றது.

ஜகத்தாரிராணா. ஓரிசா மாநிலத்தின் ஒரு எளிய பத்திரிக்கை நிருபர். அம்மாநில போலீசு கும்பல் வர்த்தக சூதாடிகளுடன், கள்ள மார்க்கெட் பேர்வழிகளுடன் கொண்டிருக்கும் கள்ள உறவை ஆதாரங்களுடன் நிரூபித்தார். அவரைக் கைது செய்தது போலீசு. அதே வணிகர்களை அழைத்துவந்து அவர் வாயில் அவர்களை மூத்திரம் கழிக்க வைத்தது. எதிர்த்த அவரது ஆசன வாயில் தடியை சொருகியது. அவர் அலறிய போது வாயில் சிறு நீரை ஊற்றியது.

சுரேஷ்குப்தா. உத்திரப்பிரதேசம் பாண்டா மாவட்டம் பாப்ரூ சிறு நகரத்தைச் சேர்ந்த பத்திரிக்கையாளர். அந்நகரத்தின் சிறு வியாபாரிகளையும் கூலி ஏழைகளையும் இழுத்துச் சென்று மிரட்டி போலீசு பணம் பறிப்பதையும் மறுப்பவர்களை சித்திரவதை செய்து படுகொலை செய்ததையும் 'பிரதேஷ் பாத்' என்ற பத்திரிக்கையில் தோலுரித்தார். பாண்டா மாவட்ட அரசு பொது மருத்துவமனையில்தான் போலியான தற்கொலை சான்றிதழ்களை போலீசு வாங்குகிறது என்று நிரூபித்தார்.

அடுத்த சில வாரங்களில் பாப்ரூ நகரின் சந்தை பகுதியிலேயே வைத்து போலீசு கும்பல் அவர் கையையும் காலையும் முறித்தது. ''உன் உடம்பில் இருக்கும் ஒவ்வொரு எலும்பையும் முறிப்போம்'' என்று அவரை நடுரோட்டில் படுக்க வைத்து மாறிமாறி தடியால் அடித்து ரத்தத்தில் மிதக்கவிட்டது. பிறகு, அருகில் இருக்கும் தனியார் மருத்துவமனையை மூடி திறக்காமலிருக்க அதற்கும் காவலிருந்தது போலீசு. சாலையில் ரத்த வெள்ளத்தில் முனகிக் கொண்டிருந்த சுரேஷ்குப்தாவை பல மணிநேரங்கள் கழித்து வெளி மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர் பகுதி மக்கள். நினைவு திரும்பிய அவர் சில நாட்களில் மருத்துவமனையிலேயே இறந்து போனார்.



உத்தர பிரதேசம் - நடுவீதியில் போலீசால் அடித்துக் கொல்லப்பட்ட சுரேஷ் குப்தா



கொலை செய்யப்பட்ட 'டெலிகி ராப் நிருபர்-ஸ்வரூப் ஜேனா (ஒரிசா)




தாழ்த்தப்பட்ட பெண்ணைக் கற்பழித்த போலீசை எதிர்த்து தலையங்கம் எழுதியதற்காகக் கைது செய்து லாக்கப்பில் அடைக்கப்பட்ட பிரம்மதியோசிங் - நயாதுனியா பத்திரிக்கை ஆசிரியர்.



பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்ட பிரம்ம செலானி



நேர்மையின் விலை - மனைவியின் உயிர்!
ஒரிசா: போலீச இழிபிறவிகளால் கற்பழித்துக் கொலை, செய்யப்பட்ட சாபிராணி - பத்திரிக்கையாளர் நவல் கிஷோரின் மனைவி.


நவல் கிஷோர் என்ற ஒரிசா பத்திரிக்கையாளர் காங்கிரசு - போலீசு ரௌடித்தனத்தை அம்பலப்படுத்தினார். சாபிராணி என்ற அவரது இளம் மனைவியை கற்பழித்து படுகொலை செய்தது காங்கிரசு போலீசு ரௌடி கூட்டம்.

கல்கத்தா, ஆனந்த பசார் 'டெலிகிராப்' பத்திரிக்கையாளர் ஸ்வரூப் ஜேனா. ஒரிசா, புவனேஸ்வரிலிருந்து இவர் வாரந்தோறும் முதல்வர் பட்நாயக் ஊழல்களையும் பொறுக்கிதனங்களையும் அம்பலப்படுத்தினார். மாணவர் போராட்டத்தின் போது செய்தி சேகரிக்க சென்ற இவரை போலீசு தடியால் அடித்து குற்றுயிராக வீசியது. மருத்துவமனையில் சில மாதங்களுக்குள்ளேயே அவர் இறந்து போனார்.

பஞ்சாப் பொற்கோவிலில் போலீசு, ராணுவம் புரிந்த அட்டூழியங்களை படங்களுடன் செய்தி சேகரித்த பிரம்ம செலானியை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சித்திரவதை செய்தது போலீசு.

இவ்வாறு எண்ணற்ற உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் தங்கள் உயிரையும் வாழ்க்கையையும் பறிகொடுத்துதான் போலீசின் அக்கிரமங்களை மக்களுக்கு தெரிவிக்கிறார்கள்.

# ‘நீதி’பதிக்கே இதுதான் கதி!



குஜராத்: போலீசுக்கெதிராக சில வழக்குகளில் தீர்ப்பு கூறியதற்காக நாதியாத் நகர போலீசால் ‘தண்டிக்கப்பட்ட’ நீதிபதி என்.எல்.படேல். சாராயத்தில் குளிப்பாட்டி, நையப்புடைத்து, கைவிலங்கு மாட்டி இழுத்துச் சென்றனர். குடித்துவிட்டு போலீசு நிலையத்தில் வந்து கலாட்டா செய்ததாகப் பொய் வழக்குப் போட்டனர். இத்தனையும் செய்த ஒரு சப்-இன்ஸ்பெக்டரைக் கைது செய்ய உச்ச நீதிமன்றத்திற்குப் போக வேண்டியிருந்தது.

# இப்போது சொல்லுங்கள் போலீசு யாருடைய நண்பன் என்று!

ரத்தத்தை உறைய வைக்கும் இங்கிருக்கும் படங்களும் சம்பவங்களும் நாளும் நடந்துவரும் போலீசின் குரூரங்களுக்கு ஒரு சில உதாரணங்கள்.

கூலி ஏழைகள், பழங்குடிகள், தாழ்த்தப்பட்டவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், சிறுகடை வியாபாரிகள், நடைபாதைவாசிகள், குழந்தைகள், சிறுமிகள், கர்ப்பிணி பெண்கள், விதவைகள், ஆதரவற்றவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், தொழிற்சங்கத் தலைவர்கள், பிச்சை எடுத்து பிழைப்பவர்கள், மனநோயாளிகள், ஓட்டுசீட்டு அரசியல்வாதிகள், உரிமைக்கு குரல் கொடுப்பவர்கள், புரட்சியாளர்கள் - இப்படி உழைக்கும் மக்களில் எவர் ஒருவரையும் விட்டுவைக்கவில்லை போலீசு.

இவர்கள் மீது போலீசு இழைத்துள்ள அக்கிரமங்கள் இன்னதுதான் என்று வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவு அவர்களின் ரத்தமும், சதையும், தன்மானமும் சின்னாபின்னாப்படுத்தப்பட்டுவிட்டன.

இவர்கள் செய்த குற்றங்கள்தான் என்ன?

கோரிக்கை விடுத்தார்கள். மிட்டாமிராசுகளால், முதலாளிகளால் அரசாங்கத்தால் தங்களுடைய நியாயமான கோரிக்கைகள் திரும்பத் திரும்ப மறுக்கப்பட்ட போதும் அவர்கள் கோபப்படவில்லை. தங்கள் கோரிக்கைகளின் நியாயங்களை திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னார்கள். சளைக்காமல் நினைவுப்படுத்தினார்கள். இதற்காக அவர்கள் தங்கள் வயிற்றுப்பாட்டையும் பொருட்படுத்தாமல் எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் நம்பிக்கையோடு ஒன்று திரண்டார்கள். ஊர்வலம் நடத்தினார்கள். எந்தவொரு சமயத்திலும் அவர்கள் கடுகளவும் சட்டத்தை மீறவில்லை.

இவர்களைத்தான் நடுத்தெருவில் சுட்டுக்கொன்றது போலீசு. இவர்களைத்தான் மண்டையை பிளந்தது போலீசு. இவர்களைத்தான் கொட்டடிகளில் கொடுமையாக சித்திரவதை செய்தது போலீசு. இவர்களைத்தான் நிர்வாணப்படுத்தி, மானபங்கப்படுத்தியது போலீசு. இவர்களைத்தான் கதறக்கதற கற்பழித்தது போலீசு.

தண்டிப்பதற்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தும் ஒரு மிட்டாமிராசுகளைக் கூட கைது செய்யவில்லை போலீசு. ஒரு முதலாளிக்கெதிராகத் தன் சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை போலீசு. கொலை, கொள்ளை, கடத்தல், ரௌடித்தனம், ராணுவ ரகசியங்களை கடத்தி விற்கும் - கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்ட எந்த ஒரு தேசத்துரோகியையும் இப்படி நடத்தவில்லை, போலீசு. மாறாக அவர்களுடன் கூடிக்கூலாவுகிறது. அவர்களில் காலை பெருமையாக நக்குகிறது. அவர்களின் மலத்தைக் கூட தலையில் வைத்துக்கொண்டு பெருமையாக பீற்றிக்கொள்கிறது! ஏன்?

இவ்வளவுக்கும் காரணம் என்ன? எந்த ஒரு போலீசுக்காரனுக்கும் மனிதாபிமானமே கிடையாதா? நியாய - அநியாயமே தெரியாதா? இல்லை. தனி ஒரு போலீசுக்காரனின் மனிதாபிமானமோ, நியாய, அநியாய உணர்வோ போலீசின் தன்மையை தீர்மானிப்பது இல்லை.

போலீசு ஒரு நிறுவனம் என்ற ரீதியில் நிலவும் சுரண்டல் அமைப்பைப் பாதுகாக்கும் கொடூர ஆயுதம். உழைக்கும் மக்கள் மட்டுமல்ல அதன் விசுவாசிகளே மிரளுமளவுக்கு போலீசின் அதிகார வெறியாட்டம் உச்சத்தை எட்டிவிட்டது.

பீகார் போன்ற மாநிலங்களில் முற்றும் முழுக்க அரசு எந்திரத்தை ஆளுங் கட்சிகளை போலீசு கிரிமினல் கும்பல்களே கட்டுப்படுத்துகின்றன. அரசுக்கு இணையான அதிகாரத்தை செலுத்துகின்றன. திரிபுரா, நாகாலாந்து, மிஜோரம், மணிப்பூர் போன்ற வடக்கிழக்கு மாநிலங்கள் மற்றும் பஞ்சாப் உட்பட நாட்டில் ஐந்திலொரு பாகத்தில் நிரந்திரமாக போலீசு - ராணுவ ஆட்சி நிலவுகிறது.



சுழற்சி முறையில் பல மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நிரந்தரமாக, போலீசும் துணை ராணுவமே ஆட்சி செலுத்துகின்றன. குறிப்பாக ஆந்திராவில் நக்சல்பாரிகள் வேரூன்றியுள்ள பகுதிகளில் கரீம் நகர், அடிலாபாத், வாரங்கல் மாவட்டங்கள் முழுக்க போலீசே அதிகாரத்தை கையிலெடுத்துக் கொண்டுள்ளது.

இன்னும் நாடு முழுக்க மக்கள் போராடும் பகுதிகளில், நகரங்களில், போலீசும் - ராணுவமும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன. இங்கெல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களும், சிவில் நிர்வாகமும் பெயரளவுக்கே இயங்குகின்றன. உண்மையான அதிகாரத்தை போலீசு, ராணுவ கிரிமினல் கும்பல்களே ஏந்தி சுழற்றுகின்றன. இவற்றை கண்டு ஆளும்வர்க்க அடிவருடிகளே பீதியடைந்து அலறுகின்றனர்.

''போலீசுத்துறை அவசியமானது; அடிப்படையில் சரியானது; ஏதோ சில விரும்பதகாத நபர்கள் ஊடுருவி விட்டார்கள். தவறான போக்குகளை களைந்தும், ஊடுருவியுள்ள சக்திகளை வெளியேற்றியும் மக்கள் நம்பிக்கை பெறும் வகையில் போலீசை சீரமைக்க வேண்டும்'' என்று எஜமானனுக்கு கோரிக்கை விடுக்கிறார்கள்.

துக்ளக் சோ போன்ற ஆளும் வர்க்க கோயபெல்சுகள்தான் ''போலீசுக்கு மேலும் கூடுதல் சலுகைகள் அளிக்க வேண்டும். ஆளும் அரசியல் கட்சிகளின் குறுக்கீட்டை தவிர்க்க வேண்டும். படித்தவர்களாக பொறுக்கியெடுத்து நிரப்ப வேண்டும். மாறாக போலீசை கண்மூடித்தனமாக குற்றஞ் சாட்டுவது அதன் தார்மீக பலத்தையே குறைத்துவிடும்'' என்று திமிரோடு வக்காலத்து வாங்குகிறார்கள்.

**உண்மையில் போலீசை திருத்த முடியுமா? உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் அனுபவம் என்ன?**

**போலீசு மிகப்பெரும் ஏகபோக அடக்குமுறை நிறுவனம்:**

* கொலை, கொள்ளை, கற்பழிப்புகளில் குற்றவாளிகள் ஈடுபடும் போது

# அடித்து நொறுக்குவோம் இந்த அரசமைப்பை! அணி திரள்வோம் புதிய ஜனநாயகப்புரட்சிக்கு!

அவர்களை தண்டிக்கும் ஏகபோக அதிகாரம் படைத்த போலீசு, தானே அவ்வாறான குற்றங்களில் ஈடுபடும் போது அவற்றை மறைக்க சட்டமீறல்கள் செய்வது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

* தற்காப்புக்குக்கூட மக்கள் ஆயுதம் ஏந்துவதை வெறியுடன் எதிர்க்கும் போலீசு தான் மட்டும் அடக்குமுறை ஆயுதங்களை, ஏகபோகமாக்கிக் கொண்டு கிரிமினல் குற்றங்களில் பகிரங்கமாக ஈடுபடுகிறது.

* தெரியாமல் ஒருவர் சாலைவிதிகளை மீறினாலும் தண்டிக்கும் போலீசிடம் வாழ்வையே, உயிரையே பறிகொடுக்கும் அளவுக்கு சட்டவிரோதமாக ஒருவர் தன்னால் தண்டிக்கப்பட்டாலும் அதனிடம் நிவாரணம், நட்டஈடுகோர முடிவதில்லை.

* சட்டத்தை மதிப்பதாக கூறும் போலீசு, எழுத்துரிமை, பேச்சுரிமை, சங்கம் வைக்கும் உரிமை இன்னும் பிற அடிப்படை உரிமைகள் எட்டளவில் இருப்பதையும் பிடுங்கிக்கொள்கிறது. யாரையும் விசாரணை இன்றி சிறைப்படுத்துகிறது எந்த இயக்கத்தையும் தடை செய்கிறது.

**போலீசு தானே தனிவகை சுரண்டல் நிறுவனம்; கிரிமினல் கூடாரம்;** தேசிய பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டம், குண்டர்கள் தடுப்பு சட்டம் போன்ற எண்ணற்ற கறுப்பு சட்டங்கள் முதல், சாலையோரங்களில் சிறுநீர் கழிப்பதை தடுக்கும் பொதுநல சட்டங்கள் வரை வரம் பற்ற சட்டங்கள் கொண்டுள்ளது போலீசு. விசாரணை இன்றி கைது செய்வது முதல், கண்டவுடன் சுடும் அதிகாரம் வரை போலீசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் போடப்படும் சட்டங்கள் அனைத்தையும் மீறுவதற்கே போலீசு பயன்படுத்துகிறது. ''மனித சமூகத்துக்கு எதிரான குற்றங்களைளத் தடுப்பது; சமூகத்தின் ஒழுங்கையும் நியதியையும் நிலைநாட்டுவதற்கானது; அவற்றுக்கு விரோதமாகப் போகும் நபர்களைத் தண்டிப்பதற்கானது சட்டம் - இப்படித்தான் சட்டத்தை உருவாக்கியவர்களும், அதன் காவலர்களும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் போலீசு செய்வது என்ன?

சைக்கிளில் லைட் இல்லாமல் செல்பவர்களிலிருந்து சாராயம் காய்ச்சும் நபர்கள் வரை, சாலை ஓரத்தில் வியாபாரம் செய்வதிலிருந்து, சாலை விதிகளை மீறுபவர்கள் வரை, அனைவரிடமும் குற்றங்களுக்கு ஏற்ப லஞ்சம் வாங்குகிறது. கொலை, கொள்ளை, கடத்தல் கிரிமினல்களுடன் கூட்டு வைத்துக்கொண்டு இயங்குகிறது. தனது வருவாய்க்காக குற்றங்களை அனுமதிக்கிறது. குற்றம் செய்ய தூண்டுகிறது. குற்றவாளிகளை அல்ல குற்றம் செய்ய மறுப்பவர்களை தண்டிக்கிறது.

போலீசு சட்டப்பூர்வ சமூக விரோத கும்பல், சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரௌடிகள் கூட்டம், மக்களின் வரிப்பணத்தை தின்று தீர்த்து மக்களையே கடித்து குதறும் கொடியமிருகம்; எந்தவொரு உழைப்பிலும், உற்பத்தியிலும் ஈடுபடாமல், மக்களை ஏய்த்து பொறுக்கி தின்னும் எச்சில் கூட்டம். மிட்டா மிராசுகளும், முதலாளிகளும் மக்களை சுரண்ட, மக்களை மந்தைகளாக்க ஆயுதம் ஏந்தியிருக்கும் கூலிப் படை. கள்ளச்சாராயம், கடத்தல், 'கான்ட்டிராக்டர்'கள், கிரிமினல் குற்றவாளிகள், கந்துவட்டிக்காரர்கள், கள்ளச்சந்தைப் பேர்வழிகளையும் மக்கள் எதிர்க்கும் போது வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு மக்களை பணிய வைக்கும் அடியாள் கூட்டம்.

* சாதி, மத, இன வெறியர்கள் மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு ரத்தம் குடிக்கும்போது அக்கும்பலுடன் சேர்ந்துக் கொண்டு வெறியாட்டம் போடும் இந்து மத வெறி மேல் சாதி இந்துக்களின் குண்டர் படை.

* ஆபாச, அராஜக, வன்முறை, போதை, கலாச்சாரக் கேடுகளால் இளைஞர்கள் மாணவர்களை சீரழிக்கும் தேசவிரோத மக்கள் விரோத கும்பல்களுக்கு துணை போகும், அதில் ஊறி திளைக்கும் கழிசடை கூட்டம்.

மக்கள் இதன் கோரபிடியிலிருந்து விடுபட போலீசு என்ற அடக்குமுறை எந்திரத்தையே கலைத்து விட வேண்டும். அதை முற்றாக அழித்தொழிக்க வேண்டும். நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும். எனவே போலீசிடம் இருக்கும் ஆயுதத்தையும் அதிகாரத்தையும் உடனே பிடுங்க வேண்டும். இந்த மாபெரும் கடமையை தனி ஒரு மனிதாரகவோ, சமரச கட்சிகளின் தலைமையிலோ சாதிக்க முடியாது.

மக்கள் அனைவருக்கும் ஆயுதம் ஏந்தும் உரிமை, மக்கள் குடிப்படை, தேர்ந்தெடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் கமிட்டிகளுக்கே சட்டம் ஒழுங்கு உட்பட அனைத்து நிர்வாக உரிமைகளும் என்கிற ஒரு புதிய அருசு அமைப்பு மட்டுமே மேற்கூறிய அக்கிரமங்களை முடிவுக்கு கொண்டுவரும்.

இந்த பணி நீண்ட நெடியது. சிரமங்கள் மிக்கது. உயிரையும் விலையாக கோருவது. என்றாலும், உழைக்கும் மக்களுக்கு இதை தவிர வேறு வழியில்லை. போலீசைப் போலவே அடக்கி ஒடுக்கும் அதற்கு துணை நிற்கும் மற்ற அரசு எந்திரங்களான, அதிகாரவர்க்கம், நீதிமன்றம், சிறைச்சாலை, ராணுவம் இவற்றையும் எதிர்க்கும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது மட்டுமே உழைக்கும் மக்களுக்கு அடக்குமுறையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் முற்றாக விடுதலை கிடைக்கும்.

ஓட்டுக்கட்சிகள் சொல்வது போல ஆளைமாற்றி தேர்தலில் ஓட்டுப்போடுவதாலோ, போலிக் கம்யூனிஸ்டுகள் சொல்வது போல, அரசு எந்திரத்தை சீரமைப்பதாலோ அதன் கொடூரங்களிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்காது. போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் 10 ஆண்டு கால, ஆட்சியும், போலி சுதந்திரத்தின் கடந்த 42 ஆண்டுகால ஆட்சியும் இதை நமக்கு திரும்பத் திரும்ப நிரூபிக்கின்றன.

போலீசை, அரசு எந்திரத்தை எதிர்த்த உழைக்கும் மக்களின் நேரடியான போராட்டங்கள்தான் அதன் மிருகபலத்தை சிதைக்கும். அதன் சிதைவிலிருந்துதான் தட்டிப்பறிக்கப்பட்ட தங்களது உரிமைகளையும், தன்மானத்தையும், வாழ்க்கையையும் உழைக்கும் மக்கள் மீட்டெடுக்க முடியும்.

அதோ, பராரியா போன்ற எண்ணற்ற கிராமங்களில் கற்பழிக்கப்பட்ட நமது சகோதரிகளும், பகல்பூர் போன்ற எண்ணற்ற இடங்களில் வாழ்க்கை குருடாக்கப்பட்ட நமது சகோதரர்களும் நாம் எதிரியை தண்டிப்போம் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்...!

## புதிய ஜனநாயகம் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | மாவோ மேற்கோள்கள் | ரூ.12.00 |
| 2. | இரவல் கம்யூனிசப் போர்வையில் இன்னுமொரு குட்டி முதலாளித்துவ கும்பல் (SUCI) | ரூ.2.00 |
| 3. | கட்சி நிறுவனக் கோட்பாடுகள் | ரூ.4.00 |
| 4. | ஹுனான் விவசாயி இயக்கப் பரிசீலனை பற்றிய அறிக்கை மாஓ சேதுங் | ரூ.5.00 |
| 5. | போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்! | ரூ.2.00 |





## மக்கள் கலை இலக்கியக் கழக வெளியீடுகள்


| | | |
|---|---|---|
| 1. | மக்கள் கலை இலக்கியக்கழகத்தின் கொள்கை அறிக்கை | ரூ.2.00 |
| 2. | யேனான் கலை இலக்கியக் கருத்தரங்கு உரைகள் | ரூ.2.00 |
| 3. | வசந்தத்தின் இடி முழக்கம் (ம.க.இ.க. கொள்கைப்பாடல்கள்) | ரூ.3.00 |
| 4. | பாரிஸ் கம்யூன் வீர நினைவுகள் | ரூ.2.00 |
| 5. | வசந்தத்தின் இடிமுழக்கம் கொள்கைப் பாடல் காசெட் | ரூ.25.00 |

## படியுங்கள்!

**புதிய ஜனநாயகம்**
மாதமிருமுறை அரசியல் ஏடு

**புதிய கலாச்சாரம்**
மக்கள் கலை இலக்கியக் கழக காலாண்டிதழ்

# அப்பாவிகள் சிறையில்!
# கிரிமினல்களோ காக்கி உடையில்!
# கிளர்ந்தெழுங்கள் இந்த அநீதியை எதிர்த்து!



போலீசால் கைது செய்யப்படுபவர் யாரானாலும் 24 மணி நேரத்திற்குள் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்த வேண்டும். 90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து வழக்கு நடத்தவேண்டும். இடையே 15 நாட்களுக்கு ஒருமுறை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் வைக்க அனுமதி பெற வேண்டும். ஆனால் இந்த விதிகள் அப்பட்டமாக மீறப்பட்டு பல லட்சக்கணக்கான அப்பாவிகள் பல ஆண்டுகள் சிறையில் வாடுகின்றனர்.